குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 44] குரோதன ஆண்டு ஆவணித்திங்கள் 10-9-85 [இதழ் 1

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு

அருள்மிகு விநாயகர் காட்சி அரு[illegible]



வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
யானைமுக னைப்பரவி அஞ்சலிசெய் கிற்பாம்

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 44 | 10-9-85 | இதழ் 10

உட்பொருள்

எண்		பக்கம்
1	பாரதப்பிரதமரை வாழ்த்துவோம்!	... 735
2	தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை	... 739
3	வாக்குண்டாம் - ஒரு மருத்துவமும் உண்டு	743
4	திருஞானசம்பந்தர்	... 744
5	கடிதம்	749, 782
6	காந்தி நெறி	... 750
7	அபிராமி அந்தாதி	. 751
8	திருவருட்பாத் திரட்டு	755
9	பதினொருதிருமுறைகள் வகுத்த காலம்	... 760
10	சைவம் கண்ட பகுத்தறிவு	... 766
11	அத்தி	... 770
12	செய்திகள்	... 772
13	எதிர்காலம்	... 777
14	மதிப்புரை	... 781
15	இதழ்வழிச் சைவசமயப் பயிற்சி - பாடம் - 8	... 783

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

ஆரார் பகைக்கினும் ஆரார்
நகைக்கினும் ஆவதென்ன
சீரார் கமலையுள் ஞானப்ர
காசன்என் சிந்தையுள்ளே
பேரா திருந்து சிவானு பவந்தரப்
பெற்றதினல்
வாராது சென்மமும் போகாது
பேரின்ப வாரியுமே.

—ஞானப்பிரகாசமாலை 12

ஆசிரியர் :-

வித்துவான்

இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்

சி.அருணைவடிவேல்முதலியார்

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 12
ஆண்டுச் சந்தா சிலோன் ,, 25
ஆண்டுச் சந்தா வெளிநாடு ,, 35
ஆயுள் சந்தா உள்நாடு ரூ.
ஆயுள் சந்தா வெளிநாடு

பாதுகாப்பிற்கும் பெரும் பங்காற்றி வந்துள்ளனர்; இந்தியாவில் வாழும் பிற மத மக்களோடு இணக்கமும் - அன்பும் கொண்டு காலங்காலமாகச் சீக்கியர்கள் வாழ்ந்துவந்துள்ளனர்.

பிரதமரின் நல்லெண்ணம் :

இந்தியாவின் நெற்களஞ்சியமாகவும், பலகோடி ரூபாய் மதிப்புள்ள மின்னியல் சாதனங்களைக் குடிசைத் தொழிலாகச்செய்து வழங்கிய தொழிற் களமாகவும் திகழ்ந்த பஞ்சாப் மாநிலம் - மதப் போராட்டத்தால் ஏற்பட்ட ரணகளத்திலிருந்து விடுபட்டு-தற்போது ஜனநாயக நெறிமுறைக்கு இணங்கி - தேர்தலை எதிர் நோக்கும் அளவிற்குச் சமாதான - சகவாழ்விற்குத் திரும்பி இருப்பதை நெஞ்சாரப் பாராட்டுகின்றோம். தீர்க்க இயலாத அளவிற்குச் சிக்கலாகி விட்ட பஞ்சாப் பிரச்சனையைத் தமது விடாமுயற்சியால் - நல்லெண்ணத்தால் - மனிதாபிமானப் பெருந்தன்மையால் தீர்த்துவைத்திருக்கும் நமது பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியை எழுபத்தைந்து கோடி இந்திய மக்களோடு இணைந்து நாமும் பாராட்டுகின்றோம், வாழ்த்துகின்றோம், விட்டுக்கொடுக்கும் நல்லெண்ணத்துடன், மேற்கொள்ளும் பேச்சுவார்த்தைகளால் தீர்க்க இயலாத பிரச்சனைகள் ஏதும் இருக்கமுடியாது என்பதை நிரூபித்து, ஜனநாயகத்திற்குப் பெருமை சேர்த்த பிரதமரின் போராற்றலை வியந்து வாழ்த்துகின்றோம், எல்லாம் இறைவன் அருளே என நினைந்து இறும்பூது எய்துகின்றோம்.

ஒரு குறளுக்கு இலக்கியம் :

செல்வச்சீமான் மோதிலாலின் கொள்ளுப்பேரன்; இந்திய முதல் பிரதமர் ஜவகர்லால்நேருவின் பேரன்; இந்திரா காந்தியின் அன்புக்குமாரன் என்ற பாரம்பரியப்பெருமைகளைக்கடந்து அரசியல் தெளிவும், நல்லெண்ணமும் மிக்க ஒருதேர்ந்த அரசியல்வாதி தாம் என்பதைப் பஞ்சாப் பிரச்சனையைத் தீர்த்து வைத்ததன் வாயிலாகத் திரு. ராஜீவ் காந்தி தெள்ளத்தெளிவாக நிரூபித்திருக்கிறார். தம்அன்பு அன்னையின் உயிரைப்பறிக்கக் காரணமானவர்கள் என எண்ணி - பஞ்சாப் தீவிரவாதிகளைப் பழிவாங்கக்கருதாது. அவர்களின் நியாயமான கோரிக்கைகளை, நல்லெண்ண உணர்வோடு பரிசீலித்து நியாயம் வழங்கிய பண்பாட்டில் திரு. ராஜீவ் காந்தி மேலும் உயர்கிறார்.

" இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு "

என்ற குறள்நெறிக்கு ஒரு புதிய இலக்கியமாக நமது பிரதமர் சிறந்துநிற்கிறார்.

அஸ்ஸாமில் அச்சம் அகன்றது :

பாரதப் பிரதமரின் இந்தச் செயல்களை வியந்து நிறைவதற்குள், இவ்வாண்டு ஆகஸ்டு 15 சுதந்திரதினத்தன்று டில்லி செங் கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றிவைத்து உரையாற்றிய திரு. ராஜீவ் காந்தி பதினைந்து ஆண்டுகளாகத் தீர்க்கப்படாது புகைந்துகொண்டிருந்த, இந்தியாவின் வடகோடி எல்லை மாநில மான அஸ்ஸாம் பிரச்சனை தீர்ந்தது என்றதித்திக்கும் செய்தியை அறி வித்து இந்திய மக்களை அளவற்ற மகிழ்ச்சியில் திளைக்கச்செய்தார். இந்திய நாட்டின் எண்ணெய்வளத்திற்கு ஊற்றுகவிளங்கிய அஸ்ஸா மில், கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வந்து குடியேறிய அகதிகளால் தோற்றுவிக்கப்பட்ட பிரச்சனைகள், தாங்கள்சிறுபான்மையினர் ஆகி விடுவோமோ என்ற அஸ்ஸாம்மக்களின் அச்சம் - குடியேறியவர்கள் தங்கள் எதிர்காலம் என்னுகுமோ எனக்கொண்டிருந்த பயம் யாவும் அகல - எதிர்க்கட்சியினரும் நெஞ்சாரப் பாராட்டத்தக்க - ஒரு தீர்வை நள்ளிரவில் கண்டு விடியலில் அறிவித்த பிரதமரின் தீரம் இந்திய மக்களைப் பிரமிப்பில் ஆழ்த்தியது. பல்லாண்டுகளாக மூடிக்கிடந்த கலாசாலைகள் திறக்கப்பட்டன. நியாயமான கோரிக் கைகளுக்காகத் தீவிரமாகப் போராடிய அஸ்ஸாம் மாணவர் அமைப்புக்கள் திரு. ராஜீவின் நல்லெண்ணத்தை நன்றியோடு புகழ்ந்துரைத்தன. அஸ்ஸாம் பிரச்சனை தீர்வதற்குச் சிலநாட்கள் முன்னர் குஜராத் மாநிலத்தில் நிலவிய - இட ஒதுக்கீடு பற்றிய போராட்டமும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இதிலும் நமது பிரதமர் ஆற்றிய பங்கு பெரிது. மற்றொரு குறளுக்கும் இலக்கிய மாகத் திகழ்கிறது.

> " சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
> சொல்லிய வண்ணம் செயல் ".

என்பதே அவ்வினிய குறளாகும்.

எல்லாம் சிவன் செயல் :

'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்பது சமய நம்பிக்கை உடைய அனைவர்க்கும் ஏற்புடைய ஒன்று. எதுவும், இறைவன் திருவுள்ளப்படியே நிகழும் என்பது அனைவரும் அறிந்ததே. 'ஆங்காலம் எவ்வினையும் ஆகும் - அது தொலைந்து போங்காலம் எவ்வினையும் போம்' என்பர் நம் ஆதிபரமாசாரியர் ஸ்ரீ குருஞான சம்பந்தர். எதனை, யாரைக்கொண்டு எப்போது இயற்றவேண்டும் என்பது இறைவனுல்மட்டுமே அறியத்தக்கது.

" அவரவருக்கு உள்ளபடி ஈசன் அருளாலே
அவரவரைக் கொண்டியற்றும் "

என்பதும் ஸ்ரீ குருஞானசம்பந்தர் கண்ட உண்மை. சமணர்களை அறுத்து சைவப்பயிரை வாழவைக்க ஒரு திருஞானசம்பந்தர் திருவவதாரம் நிகழ்ந்தது. அரசியல்நிலையில் அன்னியஏகாதிபத்தியத்தை அகற்ற ஒரு காந்தியடிகளின் வருகை நிகழ்ந்தது. இதுபோது இந்தியாவில் நிலவிய இருபெரும்பிரச்சனைகளை முடிவுக்குக்கொண்டுவர ஒரு ராஜீவின் பிரவேசம் காரணமாயிற்று. இவற்றை நீள நினைந்து பார்த்தால் 'எல்லாம் சிவன்செயல்' என்ற எண்ணமே மேலோங்கி நிற்கிறது.

ஈழத்திலும் இனிமை பிறக்கட்டும் !

இந்தியாவை உலுக்கிய இரண்டு பெரும் சவால்களைத் தீர்த்து வைத்த அதே நிதானத்துடனும், நல்லெண்ணத்துடனும், இலங்கைத் தமிழர் பிரச்சனைகளையும் தீர்த்துவைக்கத் திரு. ராஜீவ் காந்தி முன்வந்திருப்பது தமிழ்மக்களுக்குப் பெரும் நம்பிக்கை ஊட்டுவதாக அமைகிறது. 'வன்முறை, இருபக்கமும்கூர்மையுடைய கத்தி'போன்றது என்பர் அறிஞர். எனவே அதனைவிடுத்து இலங்கை அரசும், தமிழ்ப்போராளிகளும் திம்புப்பேச்சில் மீண்டும் நாட்டம்கொண்டு இந்திய அரசின் நல்லெண்ணத் துணையோடு விரைவில் கௌரவமான தீர்வுக்கு வரவேண்டும் என்பதே இந்திய மக்களின் எதிர்பார்ப்பாகும். நமது பிரதமர் இம்முயற்சியிலும் வெற்றிபெறுவார் என நம்புகின்றோம். வெற்றி பெறவேண்டும் எனப் பிரார்த்திக்கிறோம். நம்பினோர் கெடுவதில்லை. இது நான்கு மறைத் தீர்ப்பு! அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிக வளம் பெறலாம்.

வாழ்க இராஜீவ்காந்தி; வளர்க பாரதம்!

வாழ்க பாரத மக்கள்; வளர்க ஒற்றுமை!

வாழ்க மனிதாபிமானம்; வளர்க உலகெலாம்!

உ
குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

ஆவணிமூலநன்னாளில்
வழங்கியருளிய

ஆசியுரை

25—8—1985

"ஈசன் அடியில் இருக்கையிலே எங்கெங்கும்
ஈசன் அடிதேடி இளைத்தேனே — பேசரிய
பொற்பதத்தன் செங்கமலப் பொற்பாதன் தன்னுடைய
நற்பதத்தைக் காணுமுன் நான்."

— குருஞானசம்பந்தர்.

குணமும் குணியும் :

எல்லாம் வல்ல பரம்பொருள் ஒரு பொருளாய் இருந்து இரு தன்மைப்பட்டு இயங்குகிறது என்பதை நுணுகிச் சிந்தித்தால் உணரலாம். உடையான் ஒருவன்; அவனின் உடைமைப் பொருள் பிறிதொன்று. அதுபோல உடையான் சிவபெருமானாகவும் உடைமைப் பொருள் சக்தியாகவும் விளங்குகிறது. குணமும் அதனையுடைய குணியையும்போலச் சக்தியையும் அச்சக்தியை உள்ளடக்கியிருக்கின்ற சிவத்தையும் கூறலாம். இங்ஙனம் அம்மையப்பராக இலங்கும் சொக்கநாதப்பெருமான் அம்மையப்பரின் பிரதிநிதிகளாக விளங்குகின்ற தகுதி வாய்ந்த உயிர்களாகிய வந்தியம்மைக்கும் மாணிக்கவாசகருக்கும் அருள் வழங்கிய திருநாள் இன்றைய ஆவணிமூலத் திருநாள். இந்நன்னாளை ஆண்டுதோறும் மதுரையில் மிகச்சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர்கள். நம் தருமையாதீனத்தின் ஆன்மார்த்த மூர்த்தி சொக்கநாதப் பெருமானே ஆதலின் அவருக்குகந்த திருநாளாகிய ஆவணிமூலத் திருநாளை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவது இங்கும் மரபாக அமைந்துள்ளது. இத்திருநாளை ஒட்டிச் சில சிந்தனைகளை மேற்கொள்வோம்.

மூன்றை இடமாகக்கொள்ளும் முதல்வன் :

எங்கும் கரந்தும் பரந்தும் உள்ள இறைவன் சிறப்பாகக் குருவின் திருவுருவையும் இலிங்கத்திருமேனியையும் அடியார்களின் திருவடிவையும் இடமாகக்கொண்டு அருள்பாலிக்கின்றார். பூமியின் அடியில் எங்கும் பரந்திருக்கும் தண்ணீர் கிணற்றை இடமாகக் கொண்டு வெளிப்பட்டுப் பயன்படுவது போலவும் ஓரிடத்தில் தோன்றப்பெறும் மின்சக்தி, செம்பு, அலுமினியக்கம்பிகளின் வழி பயன் தருவது போலவும்; அறிவு புத்தகத்திற்குள் அச்சடிக்கப் பட்டுள்ள எழுத்துக்களை இடமாகக் கொண்டு படிப்போர்க்குப் பயன் தருவது போலவும் இதனைக்கொள்ளலாம். பூமிக்கடியில் இருக்கும் தண்ணீர் கிணற்றை இடமாகக் கொண்டு வெளிப்படுகிறதே தவிர கிணறே தண்ணீரைத்தருவதில்லை; மேட்டூரிலோ நெய்வேலியிலோ உற்பத்தியாகும் மின்சக்தி இங்குள்ள செம்புக்கம்பியின் வழி வருகிறதே தவிர இந்தக் கம்பியே மின்சக்தியைத் தருவதில்லை; புத்தகத்திலுள்ள எழுத்துக்கள் படிப்போருக்கு அறிவை உண்டு பண்ணுகிறதே தவிர எழுத்துக்களே அறிவாவதில்லை. இவை போலவே எங்கும் நிறைந்திருக்கும் இறையருள்தான் குருவையும் இலிங்கத்தையும் அடியார்களையும் இடமாகக்கொண்டு வெளிப்பட்டு அருள் வழங்குகிறது என்பதனை ஆழ்ந்துணர்தல் அவசியமாகும். இத்தகைய குரு, இலிங்க, சங்கம வழிபாட்டைத் திருமூலர்த் தம் திருமந்திரத்தில், " ஒன்றவன் தானே ... " என்று துவங்கும் பாடலில், " நின்றனன் மூன்றினுள் " என்னும் தொடரில் சுட்டி விளக்குகின்றார். ' நின்றனன் மூன்றினுள் ' என்னும் தொடருக்கு இலய, போக, அதிகாரம் என்ற பொருள் உண்டு எனினும் குரு, லிங்க, சங்கம வழிபாட்டைக் குறிப்பது என்று பொருள் கொள்ளுதலும் உண்டு.

முத்திறம் அமைந்த முதன்மைத் தருமை :

இந்த குரு, லிங்க, சங்கம வழிபாடு இத்தருமபுரத்தில் சிறப்பாக அமைந்துள்ளது. தருமன் பூசித்த தருமபுரீசுவரர் முன்னமே இலிங்கத்திருமேனியில் எழுந்தருளியிருப்பதோடு சொக்கநாதப் பெருமான் திருமடத்தில் எழுந்தருளியிருப்பது இலிங்க வழிபாட்டிற்கும், ஆதீன முதல் ஆசாரிய மூர்த்தியாகிய ஸ்ரீ குருஞான சம்பந்தரும் அவரின் பிரதிநிதிகளாய் அமைந்துள்ள மகா சந்நிதானங்களும்குருவழிபாட்டிற்கும், அவர்களின்அருளாசிபெற்ற அடியார் பெருமக்கள் சங்கம வழிபாட்டிற்கும் உரிய நிலையில் அமைந்துள்ள அருட்சிறப்பை இங்குக் காணலாம்.

பாற்கடல் மீனுரும் பல்லுயிரின் நிலை :

இறையருள் எங்கும்பரந்துவிரிந்திருந்தும் குரு, லிங்க, சங்கமங்களை இடமாகக்கொண்டு வெளிப்பட்டருளியும் பல உயிர்கள் இந்நிலை உணராது அல்லற்படுவதனை ஆதீன ஆதிபரமாசாரிய மூர்த்திகள் ஒருபாடலில் அருளிச்செய்கிருர். இறைவனுடையதிருவருளேஎல்லாவற்றையும் இயக்குகிறது; வளர்க்கிறது; வாழ்வளிக்கிறது என்பதனைக் குருவருள் பெற்ற தகுதியுடைய உயிர்கள் உணர்கின்றன. ஆசாரியன் அருளைப் பெருத தகுதியற்ற உயிர்கள் உணராது துன்புறுகின்றன. ஆசாரியமூர்த்திகளின் துணையின்றிப் பிற உயிர்கள் உணரும் தகுதியைப்பெற இயலாது. இதனைக் குருஞானசம்பந்தர்,

"ஈசன் அடியில் இருக்கையிலே எங்கெங்கும்
ஈசனடி தேடி இளைத்தேனே — பேசரிய
பொற்பதத்தன் செங்கமலப் பொற்பாதன் தன்னுடைய
நற்பதத்தைக் காணுமுன் நான்"

என்ற பாடலில் ஆசாரிய மூர்த்தியின் திருவருளைப் பெறுவதற்கு முன்னர் ஈசனடியில் இருக்கின்ருேம் என்பதையும் அவனருளில் கலந்தின்புறுகிருேம் என்பதையும் உணராது ஈசன் அடி வேறு எங்கோ இருக்கிறது என்று தேடி இளைத்தேன் என்று தம் அனுபவமாகக் குருமூர்த்திகள் விளக்கியருள்கின்றுர்கள். இத்தகைய உணர்வில்லா உயிர்களைப்பற்றிச் சாத்திரநூல்களும் விரித்துக் கூறுகின்றன. திருவருட்பயன் ஆசிரியர் உமாபதி சிவாசாரியர் பாற்கடலில் உள்ள மீன் தான் பாற்கடலில் இருக்கின்ருேம், அப்பாலை நுகர்கின்ருேம் என்று உணராது; அது போன்று உயிர்களும் இறையருளிலேயே வாழ்ந்தும் இறையருளை உணரவில்லை என்று ஓர் எடுத்துக்காட்டின் மூலம் விளக்குகிருர்.

"பாலாழி மீனுளும் பான்மைத் தருளுயிர்கள்
மாலாழி யாளு மறித்து"

என்னும் குறள் வெண்பா அக்கருத்தை விளக்குவது காண்க.

அவரே, மேலும் நம் அனுபவம் ஒன்றையும் காட்டி விளக்குகின்ருர். தரையில் நின்றும் நடந்தும் வாழும் நாம் அத்தரையிலிருப்பதையோ நமக்கு ஆதாரமாக அத்தரை இருக்கிறது என்பதையோ உணர்வதில்லை; அதுபோலவே இறையருளையும் உணரவில்லை என்று விளக்குகின்ருர்.

" தரையை யுணரார்து தாமே திரிவார்
புரையை உணரா புவி "

என்னும் குறள் வெண்பாவில் அக்கருத்து அடங்கியுள்ளது.

எனவே மக்களாய்ப் பிறந்த அனைவரும் நாம் யார்? நம்மை ஆட்டுவிப்பான் யார்? என்பதனை இந்நன்னாளில் நன்கு ஆழ்ந்து சிந்தித்து உணர்ந்து அப்பெருமானை நன்றியுணர்வோடு வழிபட்டு உய்வார்களாக!

செந்தமிழ்க் கவியரசி :

மதுரையில் சங்கத்திலமர்ந்து தமிழை வளர்த்த சொக்கநாதப் பெருமானைக் கொண்டாடும் முகமாக அவருக்குகந்த இந்த ஆவணி மூலத் திருநாளில் தகுதி சான்ற புலவர்களையும் பல்துறை ஆய்வு அறிஞர்களையும் அழைத்துப் பட்டம் அளித்துச் சிறப்பிப்பதை நமது ஆதீனம் கடந்த 35 ஆண்டுகளாகச் செய்து வருகின்றது. அவ்வகையில் இன்று பட்டம் பெறுபவர் பேச்சு, கட்டுரை, கவிதை எனும் முத்துறையிலும் வல்லவரான திருமதி சௌந்தரா கைலாசம் அவர்கள் ஆவர். தன் பேச்சாலும் எழுத்தாலும் கவிதையாலும் கடந்த 30 ஆண்டுகளாகச் சமயத்திற்கும் சமயப் பண்பாட்டிற்கும் தமிழ்வழியாகப் பணியாற்றி வருபவர். குடும்பப் பாங்காகவே இருந்து தன்னுடைய உழைப்பினிலும் ஆர்வத்தினிலும் இம்முத்துறையிலும் சிறந்த இடத்தைப் பெற்றுள்ள இவர்களுக்குச் சொக்கநாதப்பெருமானின் சந்நிதானத்தில் ஆசிக்கவசமாகப் பொன்னுடை போர்த்திச் 'செந்தமிழ்க் கவியரசி' எனும் பட்டம் அளித்துச் சிறப்பிக்கப்பட்டுள்ளது. அவர்கள் இன்னும்பல்லாண்டுகள் வாழ்ந்து மொழிக்கும் சிறப்பாகச் சமயத்திற்கும் தொண்டாற்றி நலம்பல பெற்றுச்சிறப்பார்களாக!

வாழ்த்து :

இந்த ஆவணி மூல நாளில் இங்குள்ள கல்வி நிலையங்களின் ஆண்டுவிழாக்களும் இணைந்து கொண்டாடப் படுகின்றன. தகுதி வாய்ந்த மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கி ஊக்கமூட்டுவதும் மரபாக இங்கு நடைபெற்றுவருகிறது. இன்று பட்டம் பெறும் செந்தமிழ்க் கவியரசி நெடிதுவாழ்ந்து அருந்தொண்டாற்றிச் சிறக்கவும் ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆசிரியர்களும் மாணவர்களும் நலம்பல பெற்று நீடுஇனிது வாழவும் எல்லாம் வல்ல ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

செந்தமிழ்க்கவி இன்பம் சிறந்திடுக !
நந்தமிழ்ச் சொக்கனருள் சுரந்திடுக !

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்
ஸ்ரீ சொக்கநாதர் பூஜைமடத்தில்



திருமதி. சௌந்தரா கைலாசம் அவர்களுக்குச் சொக்கநாதர் இண்டைமாலை சூட்டிச் 'செந்தமிழ்க் கவியரசி' என்ற பட்டம் பொறிக்கப்பெற்ற பொற்பதக்கம் வழங்கிப் பொன்னுடை போர்த்தி ஆசியருளல்.
25—8—85

ஸ்ரீ மாதவச்சிவஞான யோகிகள் இருநூறுவது ஆண்டு நினைவாகத்
தருமையாதீனம் அனைத்துலகச் சைவசித்ததாந்த ஆராய்ச்சி நிறுவனம்
சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் 22—5—85 முதல் 28—5—85 முடிய நடத்திய
கோடைக்காலச் சைவசித்தாந்தப் பயிற்சி வகுப்பில் பயிற்சி பெற்றோர்.

வாக்குண்டாம் -
- ஒரு மருத்துவமும் உண்டு

"வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது — பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு"

இது ஔவைப் பாட்டு. யானை முகத்தான் பாதங்களை இடைவிடாமல் நினைந்து வழிபடுவோர்க்கு வாக்குவன்மை, மனவலிமை, இலக்குமி கடாட்சம் உண்டாகும்; உடல் நலம் கெடாது - இது இப்பாட்டின் கருத்து.

இச் செய்யுள் காயகல்ப மூலிகைகளையும் மறைபொருளாகக் காட்டுகிறது. பூ - தாமரைப்பூ; வெண்டாமரை. மேனி - குப்பை மேனி; தும்பி - தும்பை; கையான் - கரிசாலை; பாதம் - செருப்படை. இவ்வைந்து மூலிகைகளும் பஞ்சபூத மூலிகைகள் எனப்படும். சரீரம் பஞ்சபூதச் சேர்க்கை.

பஞ்சபூத மூலிகைகளைச் சித்த மருத்துவ முறையில் உபயோகித்தால் வாக்குத்தெளிவு, மன ஆயாசம்நீங்குதல், மேனிப்பொலிவு, நோய்வாராமல் காத்தல் என்னும் நன்மைகள் உண்டாகும் - இது மறைபொருள்.

வெண்தாமரைப் பூவின் இதழ்கள், குப்பைமேனி, தும்பைச் சமூலம், கரிசலாங்கண்ணி (கரிசாலை), செருப்படை என்னும் இம் மூலிகைகளைச் சித்தமருத்துவ முறை கூறும் அளவோடு, நிழலில் உலர்த்தித் தனித்தனியாக இடித்துச் சூரணம்செய்து வைத்துக் கொண்டு, தேனோடுகூட்டி ஒரு மண்டலம் (நாற்பத்தெட்டுநாட்கள்) உட்கொள்ளவேண்டும். பத்தியம் உண்டு - இங்ஙனம் மருத்துவ நூல்கள் கூறுகின்றன.

தாமரைப் பூவில் தாமிரச் சத்து ஐம்பது விழுக்காடு உண்டு. கரிசாலையில் இரும்புச்சத்தும் செருப்படையில் ஈயச்சத்தும் உள்ளன.

கடவுளை வணங்கு அதில் காயகல்பமும் உண்டு என்பதைத் தெரிந்து கொள் என்கிறது ஔவை வெண்பா!

— 'குருதாசன்'

ஆதாரம் :- இயற்கைதரும் இன் மருந்துகள்.
ஆசிரியை :- வைத்திய விசாரதை, டி. எஸ். ஜனககுமாரி.
பதிப்பகம் :- தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, தி. நகர்-சென்னை-17.

திருஞானசம்பந்தர்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம்.ஏ., பி.எட்

[தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் 4—8—1985 ஆங்கில மாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தையொட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

கதிரவன் கிரணக்கையால் புறவொளி வழங்கிக் கைம்மாறு கருதாது உலகை வாழ்விக்கிறான்! குருமணிகளும் அப்படித்தான்! தம் அருள் ஒளியால்-மொழிகளால் அன்பர்களை அகஇருள் அகற்றி வாழ்விக்கின்றார்கள்! - அடியேன் சிந்தனை சிறகடித்தது. அன்று முதல் ஞாயிறல்லவா! காலை 9-40க் கெல்லாம் திருமடம் சென்றடைந்தேன்.

அஷ்டலட்சுமிக் கட்டில் - அற்புதமான கண்ணப்பர் சிற்பம். கண்ணைப் பெயர்த்து அப்பும் நிலையில் அமைந்த அருமைத் திருக்கோலம்! எண்ணெய் இட்டுப் பளபளப்பாகக் காட்சியளிக்கின்ற இன்பமே இன்பம்! இது காளத்தியோ! - இப்படி நினைத்துப் பார்க்கிறேன்.

பண்டாரக்கட்டிலிருந்து அரஹரமுழக்கம்எழுந்தது! அன்பர்கள் நீறுபெற்று அணிந்தனர்; பாராயணம் தொடர்ந்தது; குருமணிகள் உபதேசம் தொடங்குகின்றது. ' சீரணியும் ' எனத்தொடங்கும் குருஸ்துதியை இசைத்தருளினார்கள். என்ன அற்புதமான பொருளுணர்வோடு கூடிய இசை! உரோமம் சிலிர்த்தது. விழிநீர் அரும்பியது!

முதலில் மாதச் சிறப்பை அருள்கின்றார்கள். " இது ஆகஸ்டு மாதம்! ஆகஸ்டு 15 சுதந்திரம் பெற்றநாள்! புறஉலகச் சுதந்திரத்தைக் காட்டுவது இந்நாள்! சமயத்துறையில் நோக்கும் போது இறைவன் ஒருவனே பூரண சுதந்திரன். அவனுக்கு நாம், அடிமைகள்! இந்தநூற்றாண்டில் சுதந்திர கீதம் பாடிய பாரதியின் பாட்டை மேற்கோள் காட்டுகின்றார்கள்.

"பூமியில் எவர்க்குமினி அடிமை செய்யோம் - பரி
பூரணனுக்கே யடிமை செய்து வாழ்வோம்"

என்பது அது.

குருமணிகள் புராணச் சிந்தனையில் ஈடுபடுத்துகின்றார்கள். ஓர் அரியகுறிப்பு! புராணப்பகுதிகளை மேம்போக்காகப் படித்து முடித்து விடலாகாது. விட்டுவிட்டுப் பலமுறை படித்துப் பொருளுணரவேண்டும். இப்படி ஓர் முன்னுரையை அமைத்துக் கொண்டு, திருஞானசம்பந்தர் திருவவதாரம் மக்கள் நன்மைக்காக இறையருள் கூட்டுவித்தது. "வேதநெறிதழைத்தோங்க" என்ற பாடலில் "பூத பரம்பரை பொலிய" என்ற தொடர் இதனை உணர்த்தும். மேலும் 'இறைவன் நமக்காக இருக்கிறான்; நம்மை அவன் காக்கிறான் - வழிகாட்டுகிறான். இதனை உணர்ந்து செயற்பட வேண்டும்' - இவ்வாறு உபதேசித்தார்கள்.

சேக்கிழார், 'புனித வாய்' என்று திருஞானசம்பந்தர் திருவாயைக் குறிக்கிறார். ஆம்! அவர் சொல் புனிதமானது! செயலும் அப்படித்தான்! இதிலென்ன சந்தேகம்? -என நாம் உணருமாறு விளக்கம் செய்தார்கள். புனிதம் என்பது தொடர்பான ஒருகருத்தைக் குறிப்பிட்டார்கள். "காதல் கூடப் புனிதமானது தான்! மாசுகற்பிக்காமல் நடந்து கொள்வதில்தான் புனிதத்துவம் அமைந்துள்ளது"

"தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை"

என்பது திருக்குறள். நிலையில் தாழ்வது குற்றம்.

புராணச் செய்திக்கு நம்மை அழைத்து வருகின்றார்கள்; சேக்கிழார் சிவம் பெருக்கும் பிள்ளையார் திருவவதாரம்பற்றி வேத நெறி தழைக்க, மிகு சைவத்துறை விளங்க, பூதபரம்பரை பொலிய என மூன்று 3 காரணங்களைப் பொதுவகையால் குறித்துப் பத்தொன்பது காரணங்களை விரிவாகக் கூறுகிறார்.

(1) புறச்சமயத் தருக்கு ஒழியவும், (2) சைவத்துறையும், (3) வைதிகநெறியும் தழைக்கவும், (4) சிவனடியார் உள்ளம் களிப்படையவும், (5) திருநீற்றுநெறி எட்டுத்திக்கிலும் விளங்கவும், (6) ஏழுலகத்தவரும் களிப்பு அடையவும், (7) தேவர்கள் அதிசயிக்கவும், (8) யாகங்கள் பெருகவும், (9) தமிழ் செய்த தவம் நிறைவேறவும், (10) தவ ஒழுக்கம் நிலைத்து நிற்கவும், (11) எத்திசைகளிலும்

தென்திசையின் பெருமையே வெல்லவும், (12) எவ்வுலகங்களிலும் பூவுலகமே சிறப்பு அடையவும், (13) செழுமை மிக்க, தமிழ் வழக்கே அயல் வழக்குகளை வெல்லவும், (14) இசைத் தமிழ் நிலைபெறவும், (15) படைப்புத் தொழில் தலைமையாகிய முதலிடம் பெறவும், (16) சீகாழிப் பதி வாழவும், (17) திருத்தோணியப்பர் அருள் பெருகவும், (18) சீகாழியில் இயங்குதிணை (19) நிலைத்திணை உயிர்களுக்குச் சிவத்தன்மை பெருகவும் ஞானசம்பந்தப் பிள்ளையார் திருவவதாரம் செய்தருளினர் - எனத் தொகுப்பு முறையில் குறித்தருளித் தனித்தனியாகப் பற்பல விளக்கங்கள் அளித்தார்கள்.

'வைதிக சைவம்' என்னும் தொடரை விளக்கினர்கள். வேதம் வைதிகம்; வேதாகம நெறி சைவம் ஆதலால், 'வைதிகச் சைவம்' எனப்பட்டது. வேதத்திற்கும் முற்பட்டது சைவம் என்பதற்கான ஆதாரங்களும் கூறுவர். ஆதலால் வைதிக நெறியோடு கலந்த சைவம், கலவாத சைவம் என இருவகையாகக் கூறலாம். ஒரே கடவுள் என்ற நிலையினின்று விரிவடைந்து யாகம் முதலிய கிரியைகளைக் கொண்டதாகப் பின் வந்த நிலையைக் கொள்ளலாம் என்ற ஆய்வுக்குறிப்பு நல்கினர்கள்.

மற்றோர் ஆய்வுக் குறிப்பு, ''சங்ககாலம் முதல் பக்திஇலக்கியக் காலம் வரை காதல் வீரம் முதலியவைபற்றிய பாக்கள் ஓங்கி நின்றன; ஞானசம்பந்தர் காலம் முதலாகத்தான் தத்துவத்துறை சிறப்பிடம் பெற்றது'' - என்பது .

'' திசையனைத்தின் பெருமை யெல்லாம் தென்திசையே வென்றேற '' - என்ற தொடரை விளக்கினர்கள். திருஞானசம்பந்தர் முதலிய அருளாளர்களை இறைவன் தென்தமிழ் நாட்டில் அவதரிக்கத் திருவுளம் பூண்டமை பற்றிக் குறிப்பிட்டுச், சுந்தரர் வரலாற்றைச் சுருக்கமாக உரைசெய்து விளக்கினர்கள். 'தமிழ் வழக்கே - அசைவில் செழுந்தமிழ் வழக்கே - அயல்வழக்கின் துறை வெல்ல' - எனும் தொடர் பின் நிகழும் பௌத்த சமண வாதங்களில் சைவத்துறை வென்றமைக்கான குறிப்பு எனலாம். சைவசித்தாந்தக் கொள்கையே உயர்நெறி; இதற்கு மாறுகஎதிர் வழக்காடி வெல்லமுடியாது - எனக்குறித்த போது நுண்பொருள் காணும் குருமணிகளின் நுழைபுலம் கண்டு வியக்கிறோம்!

'படைப்பென்னும் தொழில் தன்மை தலைமைபெற '-என்றார் சேக்கிழார். ஞானசம்பந்தரைப் படைத்தமையால் படைப்புக்கே ஒரு சிறப்பு! காந்தியின் தோற்றத்தால் இந்தியாவுக்குச் சிறப்பு என்பதுபோல்! - என எடுத்துக் காட்டினர்கள்.

இங்ஙனம் சேக்கிழார் செந்தமிழின் இனியதொடர்களை - அரிய பற்பல விளக்கங்களோடு அருளினர்கள். சிலவற்றையே இக் கட்டுரையில் குறித்துக்காட்ட இயன்றது.

குருமணிகள் தொடர்கிருர்கள்: " ஞானசம்பந்தர் பண்டு தவம் புரிந்த பான்மையினர் ஆதலால் அவர் அழுதருளிய பான்மையைச் சேக்கிழார், " முன்னை நிலையில் இறைவரோடு கூடிநின்ற தன்மையினின்றும் பிரிந்துபோந்த உணர்வுமீதூர, அவ்வப்போது மனத்தில் அதனை நினைந்தார்; அறிய முடியாத குறிப்போடு அழுதார் எனக் குறித்தார். ' பிரமதீர்த்தக் கரையில் தந்தையார் அகமருடணஜபம் செய்த காலை, மேலைச் சார்பு உணர்ந்தமையாலோ - பிள்ளைத் தன்மையாலோ ' அம்மே! அப்பா " என அழுதார்! மேலைச்சார்பு உணர்ந்தவர் ஞானசம்பந்தர் என்பதனைச் சான்று கொண்டு நிறுவினர்கள்;

" திருந்தடி, மறக்குமா றிலாத என்னை
மையல் செய்திடும் மண்ணின்மேல்
பிறக்குமாறு காட்டினுய் "

என்னும் திருத்துருத்திப் பதிகப்பாடற் பகுதியைச் சான்று காட்டிய போது அன்பர்களின் இதயம் இன்புற்றது! அற்புதமான அகச் சான்றல்லவாஅது! புராணக் கருத்துக்களை இப்படித்தான் அணுக வேண்டும் எனப்புத்தி புகட்டியது குருமணிகளின் ஆய்வு!

ஞானசம்பந்தர் அழுதருளினர்! பரம்பொருள் அருளியபடி அம்மை திருமுலைப்பாலைப்பொன்கிண்ணத்தில் கொண்டுஊட்டினர். தந்தையார் கரையில் எச்சில் ஒழுகநின்ற ஞானசம்பந்தப் பிள்ளையாரை நோக்கினர்; ' யார் தந்த எச்சிற்பாலை உண்டாய்? ' எனச் சிறுகோல் கொண்டு ஓச்சியவாறு வினவினர். பிள்ளையார் சுட்ட முடியாத பரம்பொருளைச் சுட்டிக்காட்டித் 'தோடுடைய செவியன்' என்று பாடினர் - இது வரலாறு.

'தோடுடைய செவியன்' என்ற பதிகத்தின் சிறப்புக்களைக் குருமணிகள் இனிமையாக விளக்கினர்கள். பிரணவத்தைக் தகர மெய்யோடு சேர்த்துப் பாடினர் (த்+ஓ) ஞானசம்பந்தர். உயிர், மெய்யோடு கலவாதவழி உலகம் இல்லை அன்ருே! தோடு - அம்பிகைக் குரியது; தோடுடைய செவியன் - அம்மையப்பயரைக் குறிப்பது. அம்மையப்பராக விளங்கி அருள்தரும் தொன்மைக் கோலத்தைத் " தோடும் குழையும் " எனும் திருவாசகத்தை மேற் கோள் காட்டி விளக்கினர்கள்.

" ஞானசம்பந்தர் இறைவனின் இடத்திருச் செவியை ஏன் சிறப்பிக்கிருர் ? குருமணிகள் வினவுகின்ருர்கள்; நாம்சிந்திக்கிரேம்: விடையும் அருள்கிருர்கள்!

' ஓம் ' என்றவடிவு இடச்செவிக்குத்தான் உண்டு. வலச்செவிப் புடைப்புக்களில் அவ்வமைப்பு இல்லை " உலகினர்க்கேற்ற சிறந்த இனிய விளக்கம் அன்பர்களை இன்ப உலகுக்கு இட்டுச்சென்றது!

' தோடுடையசெவியன் ' என்ற பாடலில் விடையேறி என்பது படைத்தலையும், மதிசூடி என்பது காத்தலையும், சுடலைப் பொடிபூசி என்பது அழித்தலையும், கள்வன் என்பது மறைத்தலையும், அருள் செய்த என்பது அருளலையும் சுட்டும். இவை இறைவனின் ஐந் தொழில்கள் என்னும் கருத்தை விரிவுபட அருளினர்கள். 'போற்றி யருளுக' என்னும் திருவெம்பாவைப் பாடலும் இவ்வாறு அமைந்த பான்மையைச் சுட்டினர்கள்.

அறியாமல் தவறு செய்தவனை மன்னித்தல் என்னும் பண்பை இராவணனை இறைவன் மன்னித்து அருளியதால் உணரலாம். சம்பந்தர் பாடலில் 8 ஆம் திருப்பாடல்களில் இக்கருத்து விளங்கும். பின்னர் செருக்குக்கொண்டு தவறுசெய்து வருந்தியவர்க்கு அருளும் பாங்கை அடிமுடிதேடிய பிரமன், திருமால் ஆகியோர்க்கு அருளிய தால் உணரலாம். இதனை ஒன்பதாம் திருப்பாட்டில் ஞானசம்பந்தர் உணர்த்துகிருர். பத்தாம் திருப்பாட்டுப் புறச்சமயத்தீமை உரைக் கும். பதினொராம் திருப்பாட்டு - பதிகத்தின் பாராயணப் பயனுக - திருக்கடைக்காப்பாக அமையும் - இப்படிச் செறிவான விளக்கம் அருளித் தவறு செய்தவனை மன்னித்தல், தீமைகளை எடுத்துக்கூறித் திருத்துதல் முதலிய பண்புகளை நம் சமயம் கொண்டு விளங்குதலைக் குறித்தார்கள்.

இனிய குரலில் - எளியமுறையில் அரியதத்துவங்களோடு அன்றைய உபதேசம் நிறைந்தது.வெளிவந்தோம்.

கனிச்சாறு பருகினேம், கனிவோடு இல்லம் ஏகினேம்.

வாழ்க குருமணிகள்!

கடிதம் :

Mrs. SOUNDARA KAILASAM
C/o P. S. KAILASAM
Retd. Judge,
Supreme Court of India.

Teynampet
Madras - 600 018

3—9—85

வணக்கத்திற்குரிய தவத்திரு குருமகாசந்நிதானம் அவர்களின் திருவடித் தாமரைகளுக்கு வணக்கங்கள்.

குருவருளும் திருவருளும் இணைந்து காட்சிதந்து அருள்வழங்கி ஆசி கூறிப் பாராட்டி வாழ்த்திப் பெருமைதரும் பட்டம் தந்து தலைமாலை அணிவித்துப் பொன்னுடை போர்த்திச் சிறப்பித்த நெகிழ்ச்சியும் மகிழ்ச்சியும் கலந்த அற்புதமான ஆவணித் திருமூல நல்லநாளை என் வாழ்நாளில் என்றுமே மறக்கமுடியாது செய்து விட்டீர்கள். நூற்றுக்கு மேலானவர்கள் குழுமியிருந்த அந்தத் திருக்கோயிலில் புனிதமும்பக்தியும் நிரம்பிவழிய-கடுமையானதொரு ''சாந்நித்யம்'' விளங்க - தாங்கள் செய்த புண்ணிய வழிபாடு சுற்றுபுறச் சூழலையும் - ஒவ்வொருவர் உள்ளத்தையும் தூய்மைப் படுத்தி உயிர்சிலிர்க்கவைத்தது! தங்கள் திருமுகத்தில் ஒளிவீசும் ஆன்மீகம் - அமைதி - நிறைவு - தாங்கள் 14 ஆண்டுக்காலமாகச் செய்துவரும் வழிபாட்டிற்கு - தங்கள் குருபக்திக்கு - கடவுள் நம்பிக் கைக்குச் சான்றுபகர்கின்றன. தாங்கள் செய்துவரும் இந்தவழிபாடு இதேபோல் சிறந்து எங்களுக்கு நல்லாசி வழங்கப் பெரிதும் உதவ வேண்டும் என்பதே என் வேண்டுகோள் தவத்திரு - குருஞான சம்பந்தப்பெருமான் - கயிலைக் குருமணி அவர்களின்திருமுன்.

தங்கள் அன்பான வாழ்த்துக்களுக்கு-ஆசிகளுக்கு-பாராட்டுதல் களுக்கு என் அன்புநிறைந்த மகிழ்ச்சியைத் தங்கள் திருவடிகளில் வைத்து வணங்குகிறேன்.

தங்கள் அன்பான ஆசியை - அருளை என்றும் வேண்டுகிறோம். தங்கள் பரிபூரண உடல் நலத்திற்காக இறைவனை வேண்டுகிறோம்.

நாதன் தாள் வாழ்க !

சௌந்தராகைலாசம்.

காந்தி நெறி

'தருமை மூலன்'

சமய காந்தி :

எம்மதமும் சம்மதமாய் ஏற்றுக் கொண்டாய்!
என்ருலும் அன்புநெறிக் கடவுள் கண்டாய்!
நிம்மதியாய் வாழ்வதற்குத் தியானம் வேண்டும்!
நீக்கமற நிற்கின்ற இறைவன் தாள்கள்
தம்மைதினம் வணங்கிடுதல் வேண்டும் என்ற
தத்துவத்தைக் காண்பித்தாய்! சமய காந்தி!
நும்வழியைப் பின்பற்றி அதனிற் காணும்
நுட்பத்தை மனிதகுலம் அறிதல் என்ருே?

சமுதாய காந்தி :

கடமைகளை முறையாகச் செய்ய வேண்டும்!
கடும்உழைப்பு நேர்மையதில் அமைய வேண்டும்!
மடமைகளைத் தீமைகளை நீக்க வேண்டும்!
மாண்புமிகு சமுதாயம் ஆக்க வேண்டும்!
நடைமுறையில் நம்பணிகள் எவையா னுலும்
நாமேதான் அவைதம்மைச் செய்ய வேண்டும்!
தடைவரினும் அஞ்சாதீர்! என்று காட்டும்
சமுதாயக் காந்தி! நீர் செய்து சொன்னீர்!

அரசியல் காந்தி :

கத்திகளை எடுக்காமல் கடுந்துப் பாக்கி
காட்டாமல் சுதந்திரத்தைக் கண்டாய்! அன்பு
வித்துதனை விளைத்திட்டாய்! அகிம்சை என்னும்
விளைபயிரை முதலாக்கி அடிமை வாழ்வைக்
கொத்திஎறிந் தரசாங்கப் போக்கை மாற்றிக்
கொள்கைகளை அறநெறியால் குழைத்துத் தந்தாய்!
வித்தகமாய் அரசியலைக் கண்ட காந்தி!
வேதனையைச் சாதனையால் வெற்றி கண்டாய்!

கட்டுரை எண். 64

அபிராமி அந்தாதி

டாக்டர் புலவர் திரு. K. சந்தானராமன், M. A., D. Lit, PH. D, D. P. P. A., D. U. N, I. U,
பருத்தியூர்

தேறும்படி சிலஏதுவும் காட்டி முன்செல்கதிக்குக்
கூறும்பொருள் குன்றில் கொட்டும்தறி; குறிக்கும்சமயம்
ஆறும்தலைவி இவளாய் இருப்பது அறிந்திருந்தும்
வேறும்சமயம் உண்டென்றுகொண்டாடிய வீணருக்கே.

அ. குறிக்கும்சமயம் ஆறும் தலைவிஇவள்

(1) நூலோர் - மேலோர் குறிப்பிடுகின்ற ஆறு சமயங்களுக்கும் அபிராமியாகிய இவளே தலைவி ஆவாள்.

(2) தொன்றுதொட்டு நூலோரும் மேலோரும் சமயங்கள் ஆறுவகைப்படும் என்று குறிப்பிடுகின்றனர். அவ்வாறு குறிப்பிடப் படும் சமயங்களைக் 'குறிக்கும் சமயம்' என்றுர். வழிபடத்தக்க, முக்தியளிக்கவல்ல, இகபர சௌபாக்கியங்களைத் தரவல்ல 'கடவுள் இதுவே' என்று குறித்துக்காட்டுவதாலும், 'குறிக்கும் சமயம்' என்றுர். அறுவகைச் சமயங்கள்: காணபத்யம், சைவம், சாக்தம் வைணவம், கௌமாரம், சௌரம் என்று ஆறுவகையாகக் குறிக்கப் படுமென்பது பெரும்பாலோர் கருத்து.

(3) சமயங்கள் ஆறு எனினும் தமிழ்நாட்டைப் பொருத்தவரை சைவம் வைணவம் என்னும் இரு பெருஞ் சமயங்களே அன்றும் இன்றும் என்றும் நின்று நிலவுகின்றன. சௌரம் என்னும் தனி சூரிய வழிபாடு தமிழகத்தில் இல்லை. பிற்காலத்தில் தோன்றிய வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் 'ஞாயிறு ஆயிரம்' என்ற நூலினைத்தவிர ஆதவனைக் குறித்த தமிழிலக்கியங்கள் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

கணபதி, முருகன், அம்பிகை ஆகிய கடவுளரை வழிபடுவோர் இங்குச் சைவசமயத்தைச் சார்ந்தவர்களே ஆவார்கள். பெரும்பாலான சக்தி பீடங்களிலும் சைவத்துக்குரிய திருநீறே பிரசாதமாக அளிக்கப்படுகிறது.

சாக்த நுணுக்கங்களைப் பத்தாம் திருமுறையாகிய திருமந்திரத்துள் காண்கிறோம். பதினோராந் திருமுறையுள் விநாயகர் திருவிரட்டை மணிமாலையும், திருமுருகாற்றுப்படையும் இடம்பெற்றிருக்கின்றன. எனவே, சாக்கிய, காணபத்ய, கௌமார சமயங்கள் தமிழகத்தில் சைவத்தின் கிளைச் சமயங்களாகவே கருதப்படுகின்றன எனலாம்.

எனினும் பாரதப் பெருநாட்டின் வேறு சில பகுதிகளில் அவை தனிச் சமயங்களாகத் திகழ்கின்றன. நேபாளம் முதல் குமரிவரை தனக்கெனப் பீடங்கள் கொண்டுள்ள தலைவியாகிய அம்பிகையே மேற்கண்ட அறுவகைச் சமயத்துக்கும் தலைவியாகிறாள். எவ்வாறு எனில், ஆறு சமயத் தெய்வமூர்த்தங்களை வழிபடத்தக்க முறையில், வேத ஆகம முறையில் 'பிராண சக்தி ஆவாஹனம்' செய்யும் பொழுது சக்தியே வருகிறாள்.

(4) எச்சமயத்தைக் கொண்டு, எத்தெய்வத்தைத் தொழுது வழிபட்டாலும் அங்கு அத்தெய்வமாக 'மாதொருபாகனே' வருவதாகச் சிவஞான சித்தியார் உரைக்கும். அதன்படி தலைவனாகிய இறைவனின் தலைவியும் பாகங்கொண்டு இணைந்தே வருவதால் சமயங்கள் ஆறுக்கும் தலைவியாகிறாள்.

(5) அபிதான சிந்தாமணி, சமயங்களை வேறு இரண்டு வகையாகக் குறிப்பிடுகிறது. வைரவம், வாமம், காளாமுகம், சைவம், மாவிரதம், பாசுபதம் என ஒருவகையாகவும் - உலகாயதம், புத்தம், சமணம், மீமாம்சம், பாஞ்சராத்ரம், பட்டாச்சார்யம் எனப்பிறிதோர் வகையாகவும் குறிக்கிறது. இவ்வாறு குறிக்கும் சமயங்களுக்கும் அவளே தலைவியாகிறாள். எடுத்துக்காட்டாக, பட்டர் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்ட பட்டாச்சார்யம் 'ஆனந்தமய கோசமே' ஆத்மா என்கிறது. அம்பிகை 'பஞ்ச கோசாந்த ஸ்திதா' என்று சகஸ்ர நாமத்தில் குறிப்பிடப்படுகிறாள். அதாவது ஆனந்தமய கோசம் உள்ளிட்ட ஐந்து கோசங்களிலும் உறைபவள் அம்பிகையே என்கிறது. அவ்வகையில் அவளே தலைவியாகிவிடுகிறாள்.

(6) உரையாசிரியர் திரு. சண்முகநாதன் அவர்கள் சைவம், வைணவம், புத்தம், சமணம் என்பவற்றுடன் கிருஸ்துவம், இஸ்லாம் ஆகியவற்றினையும் சேர்த்துத் தற்கால முறைப்படியும் அவள் ஆறுசமயத் தலைவி என்கிறார். உ. வே. சா. அவர்களின் "கலைமகள் சமயங்கடந்த தெய்வம்" என்ற தலைப்பில் குறிப்பிடும் கருத்துக்களும் இங்குச் சிந்தித்தற்கு உரியது.

(7) "சமயமவை ஆறினுக்கும் தலைவன்தான் காண்" என்றும், "தொண்டர்க்கு அங்கங்கே அறுசமயமாகி நின்ற திக்கன்" என்றும் "இருமூன்று சமயமாகிப் புக்கான்" என்றும்,

அப்பர் தேவாரம் கூறுகிறது. "அறிவினுள் மிக்க அறுவகைச் சமயத்தவர்க்கு ஆங்கே அருள்புரிந்து" என்பார் சுந்தரர். "அறுவகைச் சமயத்து அருந்தவர்" என்கிறது பெரிய புராணம்.

(8) கந்தபுராணத்தில் கச்சியப்பர் அம்பிகையினை "மூவிரு சமயத்தோரியன் முதல்வி" என்று போற்றுகிறார்.

ஆ. இவளாய் இருப்பது அறிந்திருந்தும் வேறும் சமயம் உண்டென்று கொண்டாடிய வீணர்

(1) இவ்வபிராமியே மேற்கூறிய ஆறு சமயங்களின் தலைவியாய் இருப்பதனை நன்கு அறிந்திருந்தும், வேறு சமய நெறிகள் இருக்கின்றன என்று கருதி அவற்றினைப் போற்றிச் சிறப்பிக்கும் சிலரைப் பட்டர் 'வீணர்' என்கிறார்.

(2) கணபதி காப்புச் செய்து, கந்தனை 'மூதறிவின் மகன்' என்று புகழ்ந்து, ஆலிலையில் துயின்ற பெம்மானின் திருத்தங்கச்சி என்று போற்றி, 'எங்கள் சங்கரன்' எனச் சிவபெருமானை உரிமைப் படக் கூறித் தனது சமயப் பொறையினைத் தெளிவு படுத்தியவர் அபிராமிபட்டர். இங்கு "வேறும் சமயம் உண்டு என்று கொண்டாடிய வீணர்" என யாரைக் கண்டிக்கிறார்? அவர்காலத்து வாழ்ந்த கர்மமீமாம்சகர்கள் ஒரு வகையினர். மாந்திரீக நெறியில் வழிபட விரைவில் பலனளிக்கும் சிறு தெய்வங்களாகிய துர்தேவதைகளை வழிபடுவோர் இன்னொரு வகையினர். இவர்களையே வீணர் என்றார் எனத் தெளிதல் வேண்டும். ஏனெனில் அடுத்த பாடலில் அத்தகைய 'பலிகவர் தெய்வ' சமயத்தினை அவரே நேரிடையாகக் குறிப்பிடுகிறார்.

(3) அத்தகையோர் காமியத்து அழுந்திக் காசுக்காகவும் பிறரது வீழ்ச்சிக்காகவும் அந்நெறியில் ஈடுபட்டுப் பிறவிப் பயனை வீணடிக்கின்றனர். பொன்னான காலத்தையும் பொருளையும் வீணடிக்கின்றனர். எனவே அவர்களை வீணர் என்றார்.

(4) தனக்குப்பிடித்த ஒருவரையோ, ஒரு நூலினையோ, ஒரு கொள்கையினையோ அளவுக்கு மீறிப் புகழ்ந்து அதனையே பிறர் மீதும் திணிக்க விரும்பும் இயல்பினரை நாம் "அவர் அதையே கொண்டாடிக் கொண்டிருப்பவர்" என்று குறிப்பிடுகிறோம். அவ்வாறே தமது நெறியினையே பெரிதும் போற்றி அபிராமிபட்டர் போன்றவரின் சிறந்தநெறியினைப் பழித்து வந்த அக்காலத்து வீணர்களை "உண்டென்று கொண்டாடிய வீணர்" என்றார்.

(5) பட்டரின் தாய்ச் சமயமான " சைவத்தின்மேற் சமயம் வேறில்லை " என்ற கோட்பாட்டில் நின்று, அதனின் வேறுபட்ட சமயத்தினரை "உண்டென்று கொண்டாடிய வீணர்" என்றார் எனினும் ஆம்.

இ. வீணருக்கே தேறும்படி சில ஏதுவும் காட்டி முன் செல்கதிக்குக் கூறும் பொருள் குன்றில் கொட்டும் தறி

(1) அத்தகைய வீணருக்கு அவர்களும் கடைத்தேறும்படி சில காரணங்களைக் கூறி விளக்கும் உண்மைப் பொருள் குன்றின் மீது அடிக்கும் முளை போன்று பயனற்றதாய் விடும்.

(2) விழித்துக்கொண்டே உறங்குவதுபோல் பாசாங்கு செய்பவனை எழுப்புதல் இயலாது. அதுபோல், அறிந்திருந்தும் வேறு சமயம் உண்டென்று கூறுபவர்கள் தெளியும் முறையிலும் நற்கதியடையும் முறையிலும் 'மெய்ப்பொருள்' உரைத்தல் வீணேயாகும். கல்லாப்புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் பயனற்றுப் போகும். 'இதனைக் குன்றில் கொட்டும் தறி' என்ற பழமொழியினால் விளக்குகிறார். மரத்தாலான முளை 'தறி' எனப்படும். அம் முளையினைக் குன்றில் செலுத்தினால் அது உள்ளே இறங்காது கூர் மழுங்கி உடைந்து விடும். வீணருக்குக் கூறும் மெய்ப்பொருளும் அவ்வாறே ஆகும்.

(3) அவர்களுக்குத் தக்க காரணங்களைக் காட்டி மெய்யான சமயப் பொருளை உரைத்து அவர்கள் நற்கதியடையும் நல்லெண்ணத்துடன் முயற்சிக்கும்செயல் பாழாகிறது. கூறுபவரின் நன்மைக்கன்றிக் கேட்பவரின் கடைத் தேற்றத்துக்கே உதவுவதாயினும் வீணர்கள் அதனைக் கொள்ளார். எனவே "தேறும்படி சில ஏதுவுங் காட்டி முன் செல்கதிக்குக் கூறும் பொருள் " என்றார்.

(4) "பாங்கறியாப் புல்லோர்க்குச் செய்த உபகாரம் கல்லின் மேல் இட்ட கலம்" என்றது பழம்பாடல். அதனையே " குன்றில் கொட்டும் தறி " என்ற பழமொழி கொண்டு விளக்கினார் அபிராமி பட்டர்.

(5) " காணாதான் காட்டுவான் தான் காணான் " என்ற குறளில் வள்ளுவரும் புல்லறிவாளனுக்கு அறிவு புகட்டுபவனும் அறிவில்லாதவன் ஆவான் என்கிறார். அவ்வாறே குன்றில் அடிக்கப்படும் முளை கீழேஇறங்காது இருப்பதுடன் கூர்மழுங்கி உடைந்து போகிறது. எனவே வீணருக்குப் புகலுதலும் வீணேயாகும்.

சமயத்துறையில் புலமையும் தலைமையும் எய்துதல் இப்பாடலின் பாராயண பலன் ஆகும்.

(தொடரும்)

ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகளின்

திருவருட்பாத் திரட்டு

(பொழிப்புரையுடன்)

வித்துவான் திருமதி. ப. நீலா எம். ஏ., எம். ஃபில்.,

(மலர் 44, இதழ் 9, பக்கம் 714 இன் தொடர்ச்சி)

கண்டவுடனே முத்தி யென்றுற்
காசி வாழுங் கங்கையுனைக்
கங்கை படிந்தோர் தமக்கு மேற்
கருதிக் கொடுக்கும் பொருளென்னே

அண்ட மனந்த கோடிகளும்
அமரர் பதமு மயன் பதமும்
அலைபாற் கடலி லரவணையான்
அரிய பதமும் படைத்தளிக்கும்

மண்டு ஞானப் பரஞ்சுடராம்
வார ணசி விசுவேசன்
வளர்செஞ் சடைமேல் நீயிருந்தே
மலர்ப்பந் தெறிந்து விளையாட

இண்டை தரங்கக் கரத்தெடுப்பாய்
ஈரே ழுலகீன் றெடுத்தாயே
யெல்லா வுயிரும் வளர்த்தாயே
யெனையாள் பாகீ ரதித்தாயே. (4)

(பொ-ரை) அனேக உலகங்களையும், தேவர் பதவிகளையும், பிரமன், பாற்கடலில் பாம்பணை மேலுள்ள திருமால் ஆகியோரின் பதவிகளையும் படைத்து அளித்திடும் ஞானம் செறியும் பரஞ்சுடராம் வாரணசி விசுவேசனின் வளர்செஞ்சடை மேல் இருந்து கொண்டு மலர்ப் பந்தெறிந்து விளையாட இண்டை மாலையைத் தரங்கக் கைகளால் எடுத்து வருபவளே! கங்கையே! உன்னைக் கண்ட மாத்திரத்திலேயே முத்தியினைத் தந்து விடுவாயென்றால் - உன்பால் படிந்த பேர்க்கு இதனிலும் மேலாகக் கொடுக்கும் பொருள் தான் யாது ? எனையாளும் பாகீரதியே! சொல்வாயாக.

(கு-ரை) 'சொல்' - என்பது சொல்லெச்சம். அரவணையான் - திருமால். 'அரவணையான் சிந்தித் தரற்றுமடி' (அப்பர் 6-6-1) மண்டு - செறிந்த. 'மண்டு மெரியுள் மரந்தடிந்து இட்டற்றால்' - (புறப். வெண். வெட்சி-1) இண்டை - தலைமாலை. 'மலர் இண்டை கட்டி வழிபாடு செய்யும் இடம்' - கேதாரம் (திருஞான-2-114-1) கண்டவர்க்கும் முத்திதரும் கருணைத்தாயென்பதனைக் கூறினார்.

ஒன்றே யருவே யருவுருவே
யுருவே யுணர்வே யுயிர்க்குயிரே
ஓங்கும் அருளே யானந்த
ஒளியே அனந்த கல்யாணகுணக்
குன்றே கருணைக் கடலேயுன்
கொழுநர் பிரியாப் பெருவாழ்வைக்
கொடுக்கும் ஞானக் கற்பகப்பூங்
கொம்பே யீன்ற தாய்பிரிந்த
கன்றே யென்ற வுனைக் காணக்
கசிவே னுயிருங் காயமு மெய்க்
காசி வாழுங் கங்கையுன் பொற்
கமலப் பாதத் துள்ளிருப்ப
தென்றோ அருளாய் உளத்திரங்கி
யீரே மூலகீன் றெடுத்தாயே
யெல்லா வுயிரும் வளர்த்தாயே
யெனையாள் பாகீ ரதித்தாயே. (5)

(பொ-ரை) ஒன்றாக - சமான மில்லாமல் இருப்பவளே! அருவாக அருவுருவாக உருவாக இருப்பவளே! உணர்வாக உயிர்க்குயிராய் நிற்பவளே! ஓங்கும் அருளாக, ஆனந்த வொளியாக, எண்ணற்ற மங்கலக் குணங்களைக் கொண்டவளாக, கருணைக் கடலாக உள்ளவளே! உனது கொழுநரை விட்டுப் பிரியாத பெரிய வாழ்வை அடியாருக்குக் கொடுக்கும் ஞானக் கற்பகக் கொம்பே! பெற்றதாயைப் பிரிந்தகன்றுபோல் உன்னைக்காணக் கசிகின்றேன். கங்கையே! எனது உயிரும் உடலும் காசியில் உன் பொற்பாத கமலத்துள்ளிருக்கும் படியான பேற்றை என்று அருளப்போகிறாய்? ஈரே முலகைப் பெற்று - எல்லா உயிரையும் வளர்க்கும் தாயான நீ என்னையும் ஆண்டிடுக.

(கு-ரை) 'ஒன்றே பல உருவே அருவே யென்னுமையவளே' - என (அபிரா - அந். 30) அபிராமிப்பட்டரும் கூறுகிறார். 'காலத் தொடு கற்பனை' - என்ற (மீனாட்சி. பிள்ளை - 44) பாடலில்

'உயிரால வாலத் துணர்வு நீர்பாய்ச்சி - வளர்ப்பார்க்கு ஒளிபூத்து அளிபழுத்த மலர்க் கற்பகமே' - என்றும் 'தோன்ருத் துணைகோர் துணையாகி' இருப்பவளென்றும் கூறப்படுகிறது. தாய்பிரிந்த கன்று - பாகீரதிையைப் பார்க்க வெழுந்த வேட்கையை இவ்வுவமை மூலம் வெகு அழகாகக் காட்டுகிருர் ஆசிரியர். 'ஈன்ற ஆன் கனைப்புக் கேட்ட கன்று போல் கதறி'. (தடுத். புரா -68) 1958-ஆம் வருட பதிப்பில் கல்யாணகுண; - 'லவ்வொற்று நீங்கி நின்ற வண்ணம் ஓசைகொள்க' - என நாலசைச்சீர் வாராமல் பதிப்பாசிரியர் காத் துள்ளார் (அடிக்குறிப்பெழுதி). பின்னே வந்த பதிப்பில் இக்குறிப் பில்லை.

கங்கை நதியாம் உன்னுருவின்
கருணைப் பெருக்காம் பேராற்றில்
காசி மணிகன் னிகையாதி
கவினுர் துறையின் மூழ்கினேர்க்
கிங்கே கிரண மதியனந்தம்
இலங்குந் தலைமாலை களனந்தம்
எழிலார் நகுவெண் டலைஅனந்தம்
இரவிமணிசேர் அரவனந்தம்
கொங்கா ரிதழித் தொடையனந்தங்
குலவு மானைத் தோலனந்தங்
கோல உழுவை யதளனந்தம்
கூர்வாய் மழுமான் அனந்தமிவை
எங்கே யிருந்துண் டாஞ் சொல்வாய்
ஈரே ழுலகீன் றெடுத்தாயே
எல்லா வுயிரும் வளர்த்தாயே
யெனையாள் பாகீ ரதித்தாயே. (6)

(பொ-ரை) கங்கை நதியென்ற உனது உருவான கருணைப் பெருக்காற்றில் மணிகன்னிகை முதலான கவின் பொருந்திய துறை களில் மூழ்கினவர்களுக்குச் சிவசாரூபம் தருவதற்கான பொருள்களை எங்கிருந்து படைத்தனை என்று கேட்கிருர். ஒளிமதிகள் அனேகம் வேண்டும், தலைமாலைகள் அதிகம் தேவை. அழகாகச் சிரிக்கின்ற வெண்டலைகள் வேண்டும். ஒளியுமிழ் மணியுடனுன பாம்புகள் அனேகம் வேண்டும். தேன்நிறை கொன்றை மாலைகள் யானைத் தோல்கள், அழகான புலித்தோல்கள் - சிறப்பான மழு மான்கள் வேண்டுமே. பதினுன்கு உலகங்களையும் பெற்றவளே! இவைகள் எங்கேயிருந்துண்டாகும் - சொல்வாயாக!

(கு-ரை) சிவனுக்குரிய பொருள்கள் எல்லாம் சிவசாரூபம் பெற்றவர்களிடமும் இருக்கும்.

உடையா ளகிலேசர்க் கோங்குமூலக் கோட்டின்
அடையாள மிட்டுவையா ளானற் - கடையிலவர்
செவ்வண்ணம் பெற்றார் திரளொடுநிற் கின்றாரை
எவ்வண்ணங் கண்டிறைஞ்சு வேம். (காசி· கல. 3)

என்று சிவபெருமானுக்குரியன எல்லாம் அடியாரிடமும் (சாரூபநிலையில்) இருக்கும் என்கிறார் குமரகுருபரர். உழுவை - புலி. அதள் - தோல். 'வாள்வரி அதளதாடை வரி கோவணத்தர்' - (திருஞான - 2-85-6) அடியார்கள் சிவசாரூபம் பெற (கங்கையில் மூழ்குதல்) நீயே காரணமா• இருப்பதால் - உன்னையே கேட்கிறேன் என்கிறார் போலும். கூர்வாய் - கூர்தல் -உள்ளது சிறத்தல்என்பதால், சிறப்பு வாய்ந்த - சிறந்த - எனப்பொருள் காணப்பட்டது.

"திருவின் நாயகன் செம்மலர் மேலயன்
வெருவ நீண்ட விளங்கொளிச் சோதியான்" (5-47-9)

"நுணங்கு நூலயன் மாலு மிருவரும்
பிணங்கி யெங்குந் திரிந்தெய்த்துங் காண்கிலா" -(5-80-8)

அன்ன மான சதுர்முகனும்
ஆதி வராகத் திருமாலும்
அடியு முடியுங் காணமல்
அண்ட மனந்தங் கடந்துநின்ற
தன்னை நிகராங் காசியில் வாழ்
சச்சி தானந் தன்முடியே
தாயே நீவாழ் அகமென்றல்
தமியே னறிய மாட்டுவனோ
கன்னற் சாறும் பெருங்கடலும்
கனபாற் கடலுந் தேன்கடலுங்
கலந்த கடலா முன்கடைக்கண்
கருணைக் கடலாம் பேராற்றில்
என்னை மூழ்க வைப்ப தென்றோ
ஈரே ழுலகீன் றெடுத்தாயே
யெல்லா வுயிரும் வளர்த்தாயே
யெனையாள் பாகீ ரதித்தாயே. (7)

(பொ-ரை) அன்னப்பறவை வடிவெடுத்த பிரமனும், பன்றியின் வடிவெடுத்த திருமாலும் முடியும் அடியும் காணதபடி பல அண்டங்களேயும் கடந்து நின்றவனும், தன்னேயே நிகர்த்த காசியில் வாழ்பவனுமாகிய உண்மை அறிவானந்தனின் திருமுடியே தாயாம் நீ வாழுமிடமென்ருல் தமியேன் மட்டும் அறியவல்லனே! கரும்பின் சாறும் கடலும் பெருமையான பாற்கடலும், தேன் கடலும் கலந்த கடலென்று சொல்லத் தகுந்த உனது கடைக் கண்ணிலிருந்து பெருகும் கருணேக் கடலென்ற பேராற்றில் என்னே மூழ்க வைப்பதென்றே! எனேயாள் பாகீரதித்தாயே!

(கு-ரை) முதல்வரியில் எதிர்நிரல்நிறையணி அமைந்துள்ளது. ஆதிவராகத்திருமால் - உலகினைக் கடலுக்கடியில் ஒளிய வைத்த இரண்யாட்சனுடன் சண்டையிட்டுத் தன் மருப்பில் உலகினைத்தாங்கி வெளிப்படுத்திய திருமால்-பன்றி வடிவமெடுத்துத் 'திருவடி' காண நிலங்கீண்டு சென்ருர். சச்சிதானந்தன் - நித்யானந்தபோதன். மாட்டுவனே-மாட்டேன் என்றபடி. இது அதிகம் பயிலாத வழக்கு. கன்னல் -கரும்பு. 'யாரும் கமுகோ என்வயிர்க்கும் செல்வக்கன்னல்' (திருவிளை. கல்யா. 11) கனபாற்கடல் - பெருமைக்குரிய பாற்கடல் ' கனத்த செந்தமிழால் ' என்பார் அருணகிரி.

கடலில் மூழ்குவது கடினம் என்பதால் - உன் கருணேயே கடலே-பேராருக்கியது என்பதன் மூலம் கருணே - பின்னும் சிறப்பாகக் காட்டப்பட்டது காண்க.

(தொடரும்)

நாவலரின் நல்லுரைகள்

இன்னகாலத்திலே இந்தச் சரீரம் நீங்கும் என்பது விளங்காமையால் நாம் எக்காலத்திலும் கடவுளே வழிபடல் வேண்டும்.

★

பிறவிக்குக் காரணமாகிய அஞ்ஞானத்தை, மெய்ஞ் ஞானத்திஞலே போக்கு.

★

மானிடருக்குள்ளே கற்ருேரும், அவரினும் ஈகையாளரும், அவரினும் ஞானிகளும் சிறந்தவர்.

— சந்மார்க்க போதினி.

பதினொரு திருமுறைகள் -
- வகுத்த காலம்

குடந்தை திரு. N. சேதுராமன் B. Sc,. D. M. I. T.,
Director, Raman & Raman Privat Limited.

(மலர் 44, இதழ் 9, பக்கம் 707 இன் தொடர்ச்சி)

இராசேந்திரனும் தன் தந்தையைப் போலவே பல வெற்றிகள் கண்டவன். கி. பி. 1023 - இல் இராசேந்திரன் வடநாட்டு மன்னரை வென்று புனித கங்கை நீரைக் கொணர்ந்தான் 17. கங்கைகொண்டான் என்றும் அழைக்கப்பட்டான். இவ்வெற்றியின் நினைவாகக் கங்கைகொண்ட சோழபுரம் என்ற நகரை நிர்மாணித்தான். அவ்வூரில் கங்கைகொண்ட சோழீச்சரர் ஆலயத்தையும் கட்டினான். அருகில் சோழகங்கம் என்ற மிகப்பெரிய ஏரியும் வெட்டினான்.

கங்கைகொண்ட சோழபுரம் என்ற பெயர் முதன் முதலாக இராசேந்திரனின் 16 - ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டில் - கி. பி. 1028-இல் கூறப்படுகின்றது 18. கங்கைகொண்டசோழபுரத்தில் உள்ள கல்வெட்டு ஒன்று இராசேந்திரனின் 23 - ஆவது ஆட்சி ஆண்டில் கங்கைகொண்ட சோழீச்சரமுடையார் கோயிலுக்கு இராசேந்திரன் அளித்த நிவந்தங்களைக் கூறுகிறது. 19 எனவே,

(1) இராசேந்திரனது கங்கை வெற்றி 1023 என்றும்

(2) கங்கைகொண்ட சோழபுரம் என்னும் நகர் 1028க்கு முன் நிர்மாணிக்கப்பட்டது என்றும்

(3) கங்கைகொண்ட சோழீச்சரமுடையார் ஆலயம் 1035க்கு முன் முடிக்கப்பட்டது என்றும் - கொள்ளலாம்.

கருவூர்த் தேவர் தஞ்சைப்பெருவுடையார் கோயிலைப் பற்றிப் பாடிஇருக்கும் பாடல்களும், கங்கைகொண்ட சோழீச்சரர் மீதுபாடி இருக்கும் பாடல்களும் 9 - ஆம் திருமுறையில் இடம் பெறுகின்றன.

---

17. Tirumalai - S· I. I. I. NO. 68 Rajendra Year 12.
18. TirunageSwaram - S. I. I. VI NO. 33 Line 98.
19. S. I. I. 1V NO. 529 Lines 51 and 91.

எனவே கருவூர்த்தேவர் இராஜராஜன்காலத்திலும் இராசேந்திரன் காலத்திலும் வாழ்ந்தவர் என்பது நன்கு துணியப்படும். நம்பியாண்டார் நம்பியே 9 - ஆம் திருமுறையையும் வகுத்தவர். இவரது கலித்துறை அந்தாதி 11 - ஆம் திருமுறையில் இடம் பெறுகிறது. இவரே இவ்வந்தாதியினை 11 -ஆம் திருமுறையில் சேர்த்ததாக உமாபதி சிவம் கூறுகிருர். இவ்வந்தாதியினை இராச ராச தேவனும் கேட்டுள்ளான் என்பதை முன்பே கண்டோம்.

தொகுத்து நோக்கினல் 9-இலிருந்து 11 - ஆவது வரையிலான நான்கு திருமுறைகள் இராசேந்திர சோழன் காலத்தில் வகுக்கப் பட்டன என்று கருதலாம். கங்கை கொண்ட சோழீச்சரர் கோயில் 1035க்கு முன் கட்டபட்டது. இராசேந்திரன் 1043 - இல் மறைந் தனன். எனவே இந்நான்கு திருமுறைகளும் 1035 - லிருந்து 1043 - க்குள் வகுக்கபட்டன எனத் துணியலாம்.

இராசேந்திரன், அவனது புதல்வர்களின் காலத்துக் கல்வெட்டுச் செய்திகள் :

திருவாரூர், சிதம்பரம்தலங்களைப் பற்றிப் பூந்துருத்திகாடநம்பி என்னும் அடியார் இரண்டு பதிகங்கள் பாடி உள்ளார். அவை 9 - ஆம் திருமுறையில் இடம் பெறுகின்றன. திருவையாறு ஐயாறப்பர் ஆலயத்தில் உள்ள வடகயிலாயம் என்று அழைக்கப் படும் கோயில் இராசராசனின் 21 - ஆம் ஆண்டில் (1006 - இல்) கட்டப்பட்டது. இக்கோயில் மன்னனின்பட்டத்து அரசியானஒலோக மாதேவி என்பவளால் எடுப்பிக்கப்பட்டு அவள் பெயரால் ஒலோக மாதேவி ஈஸ்வரமுடையார் என்று அழைக்கப்பட்டது 20. இக்கோயி லில் உள்ள கல்வெட்டு ஒன்று இராசேந்திரன் மகனை இராஜாதி ராஜனின் 32 - ஆவது ஆண்டில் செதுக்கப்பட்டது (கி. பி. 1050). இக்கல்வெட்டில் இவனது தந்தையான இராசேந்திரசோழதேவ ரின் 27-ஆவது ஆண்டில் கி. பி. 1039-இல் கோயிலில் பணிசெய்த பத்துப்பதியிலாரும், இரண்டு கரணத்தாரும் ஆகக் கண்காணி செய்வார் பன்னிருவர் குறிப்பிட்டப்படுகின்றனர். அதில் ஆத்ரேயன் (ஆத்ரேய கோத்திரத்து) நம்பிகாடநம்பியும் ஒருவர் 21. இவரே பூந்துருத்தி காட நம்பி ஆவார் என்பதில் சிறிதும் ஐயமில்லை. பூந்துருத்தி என்னும் கிராமம் திருவையாற்றுக்கு மிக் அருகில் உள்ளது.

---

20. S. I. I. V. No. 518.

S. I. I. V. No. 520 Line 124

தஞ்சை மாவட்டத்தில் திருப்பனந்தாளுக்கு மேற்கில் மானம்பாடி என்னும் கிராமத்தில் உள்ள நாகனுத சுவாமி கோயில் இராசேந்திர சோழன் காலத்தில் கட்டப்பட்டது. இம்மன்னனின் 5 - ஆம் ஆட்சி ஆண்டு கி. பி. 1017க்கு உரிய கல்வெட்டு ஒன்று கோயிலில் தென்சுவரில் உள்ளது. நாங்கூரைச்சேர்ந்த மறைக்காடன் பதஞ்சலி பிடாரர் என்பவர் இராசேந்திர சோழனுக்குத் தேவார நாயகமாக விளங்கினர் என்று சொல்லப்பட்டுள்ளது 22. தேவாரத்திருமுறைகள் 7 - ஆக வகுக்கப்பட்ட பிறகு மூன்று ஆண்டுகளுக்குள்- இராசேந்திர சோழன் காலத்தில் தேவாரம் ஓதுவார்களை மேற்பார்வையிடத் தேவாரநாயகம்என்னும் அதிகாரி நியமனம்செய்யப்பட்டார் என்னும் செய்தி சிந்தனைக்குஉரியது. (பிடாரர்என்பவர்தேவாரம்பாடுபவர்).

சுந்தரமூர்த்தி நாயனார் அவதரித்த தலம் திருநாவலூர் ஆகும். இன்று திருநாமநல்லூர் என்று அழைக்கப்படுகிறது. இவ்வூர் பக்தசனேஸ்வரர் கோயிலில் உள்ள இராசேந்திர சோழனின் 6-ஆம் ஆட்சி ஆண்டு கி. பி. 1018-க்கு உரிய கல்வெட்டில் நம்பி ஆரூரரின் (சுந்தரமூர்த்தி நாயனாரின்) சிலை வைக்கப்பட்டு வழிபாட்டுக்கு நிவந்தங்கள் அளிக்கப்பட்டன என்று கூறப்பட்டுள்ளது 23.

தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் உள்ள இராசேந்திர சோழனின் 19-ஆம் ஆட்சி ஆண்டு, கி. பி. 1031-க்கு உரிய கல்வெட்டில் ''உடையார் இராசேந்திர சோழ தேவர் கங்கை கொண்ட சோழபுரத்துக் கோயிலிலுள்ளால் முடிகொண்ட சோழன் திருமாளிகையில் வடபக்கத்துத் தேவாரத்துச்சுற்றுக் கல்லூரியில் தானம் செய்து அருளா இருந்து'' என்று சொல்லப்பட்டுள்ளது 24. கங்கைகொண்ட சோழபுரத்து அரண்மனைக்குள் இருந்த பூசனை வழிபாட்டுக்கு உரிய இடம் தேவாரம் என்று அழைக்கப்பட்டது.

திருமழபாடியில் இராசேந்திரனின் 20-ஆம் ஆட்சி ஆண்டில் 1032-இல் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனாருக்குப் படிமங்கள்எடுக்கப்பட்டு வழிபாடுகளுக்குநிவந்தங்கள் அளிக்கப்பட்டனஎன்றுஒருகல்வெட்டுக்கூறுகிறது 25. சிதம்பரத்தில் இராசேந்திரனின் 24-ஆம் ஆட்சி ஆண்டில் 1036-இல் திருமாசித் திருநாளில் சுந்தரரின் திருத்தொண்டத் தொகை விண்ணப்பம் செய்வாருக்கு நிவந்தங்கள் அளிக்கப்பட்டன 26.

---

22. A. R. E. 97/1931-32.
23. A. R. E. 225/1939 - 40.
24. S. I. I. II NO. 20 Line 12.
25. A. R. E. 37/1920.
26. S. I. I. IV NO. 223 Line 25.

திருச்சி மாவட்டம், அல்லூர் கிராமத்தில் உள்ளபஞ்சநதீஸ்வரர் ஆலயத்தில் இராசேந்திரனின் மகனை இராசாதிராச தேவனின் 27-ஆவது ஆட்சி ஆண்டுக்கல்வெட்டு சுவையானசெய்தியைத்தருகிறது. இக்கல்வெட்டின்காலம் கி.பி.1045. ''திருவடகுடி மகாதேவர் ஸ்தானமடம் தேவாரத்துக்குத் திருப்பதியம் விண்ணப்பம் செய்யும் அம்பலத்தாடி திருநாவுக்கரையன்'' என்பவனுக்கும் இவன்வம்சத் தாருக்கும் மடபோகமாக அளித்த நிவந்தம் கூறப்பட்டுள்ளது 27.

கீழூர் வீரட்டானேஸ்வரர் கோயிலில் இராசேந்திரனின் இரண்டாம் மகனை இராசேந்திர தேவனது 5-ஆம் ஆட்சி ஆண்டு கி. பி. 1057-க்கு உரிய கல்வெட்டில் (மாணிக்கவாசகரின்) திருவெம்பாவை விண்ணப்பித்தல் கூறப்படுகிறது 28.

இராசேந்திரனின் நான்காவது மகனை வீரராஜேந்திரனது திருவொற்றியூர் கல்வெட்டின்காலம்கி. பி. 1070. இதில்கூறப்படும் செய்தி, படிப்போர் மனத்தை உருக்கிவிடும். வீரராசேந்திரனின் பட்டத்து அரசி கோயிலுக்கு நிலங்களைத் தானமாக வழங்கினுள். தன் கணவர் உடல் நலம் பெறவும், தன் திருமாங்கல்யம் மங்கலமாக விளங்கவும், தன் மகன் உடல் நலம் தேறவும், தன் மகனுக்கு மகப்பேறு உண்டாகவும் இறைவனை வழிபட்டுக் கோயிலில் மாணிக்கவாசகரின் திருவெம்பாவை விண்ணப்பம் செய்வதற்கு நிவந்தங்கள் அளித்தனள் 29.

திருமுறைகள்பதினென்ருகத்தொகுக்கப்பட்டபின்-சமுதாயத்திலும், சமயத்திலும் கோயில்களிலும் ஏற்பட்டபுதிய மறுமலர்ச்சியினை இக்கல்வெட்டுச் செய்திகள் படம்பிடித்துக் காட்டுகின்றன.

குலோத்துங்கன் காலத்தில்

கங்கைகொண்ட மன்னன் இராசேந்திர சோழனது பெண் வயிற்றுப் பேரனே முதற்கு லோத்துங்க சோழனுவான். இம்மன்னர் பெருமான் கி. பி. 1070 முதல் 1122வரை அரசு புரிந்தவன். இம் மன்னனிடத்தில் '' மணவிற் கூத்தன் நரலோகவீரன் '' என்னும் படைத்தலைவன் பணிபுரிந்தான். இவன் சிறந்த சிவபக்தன்.

திருவதிகையில் நரலோகவீரன் திருநாவுக்கரசருக்குத் தனிக் கோயில் ஒன்றைத்திருவதிகை வீரட்டானேசுவரர் கோயிலில் எடுப்பித்தான். நரலோகவீரன்திருவதிகைத்தலத்திற்குச்செய்தபணிகளை 25-பாடல்களாகத் திருவதிகைக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. 30

27. S. I. I. VIII NO. 675
28. A. R. E. Kilur 12/ 1905 ; E. I. IX Page 89
29. A. R. EP. 1913 Part II qara 32
30. A. R. E. 369/1921; நாலாம் திருமுறை பக்கம் 19.
தருமை ஆதீன வெளியீடு எண். 391.

சிதம்பரம் நடராசப் பெருமான்ஆலயத்தில் அன்னையின்கற்றளி எடுக்கப்பட்ட காலத்தை ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. 31

ஒதும்சக ரர்யாண்டு ஒருபத்து எட்டின்மேல்
ஆதி மூலநாள் ஆனிதனில் — சோதி
துளங்கிட மேல்சோழன் சோழகுல வல்லி
களங்கமற வைத்தான் கரு.........உ

சகவருடம் 1018 சென்று அதன் மேல்வரும் ஆண்டில் ஆனி மாதத்தில், மூலநட்சத்திரம் திகழும் ஆதிநாளான ஞாயிற்றுக் கிழமையில் சோழ குலவல்லி (சிவகாமி) அன்னையின் திருமேனி (கற்சிலை) வைக்கப்பட்டது. அம்மனுக்கு என்று தனித் கற்றளி எடுக்கப்பட்ட காலத்தை இப்பாடல் குறிப்பிடுகின்றது.

இக்கல்வெட்டின் காலம் கி. பி. 1096, ஜூன் மாதம் எட்டாம் தேதி ஆகும். அந்நாள் ஆனிமாதம் 15-ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமைக்குச் சமமானது. அன்று இரவு 12-மணி வரை முழுமதியும், மூலநட்சத்திரமும் திகழ்ந்தன. ஆனி மூலம் பௌர்ணமி நாள் சிவன் கோயில்களில் சிறப்பான நாளாகும். ஞாயிற்றுக்கிழமை-பௌர்ணமி பொருத்தமான நாள்தான். சூரிய குலத்துச் சோழ வம்சத்திற்குக் குளிர்ச்சி பொருந்திய முழுமதியை ஒத்த அன்னையின் அருள் கிட்ட வேண்டும் என்று விண்ணப்பம் செய்வது போல நாளைக் குறித்து அம்மனைப் பிரதிட்டை செய்தனரோ? அன்னையைச்சோழ குலவல்லி என்று கல்வெட்டுக் கூறுவதைப் பாருங்கள். இச்செய்திகள் பக்தி மார்க்கத்தில் எதிரொலிகளே!

சிவகாமி அம்மையின் கற்றளி கி. பி. 1096-இல் எடுக்கப் பட்டது. இதுமுதற் குலோத்துங்கன் ஆட்சிக் காலமாகும். சிதம்பரம் நடராசப் பெருமான் ஆலயத்திற்கும், சிவகாமி அன்னையின் கோயிலுக்கும் நரலோகவீரன்பலதிருப்பணிகள் புரிந்தனன். இவை களைப் பற்றி விரிவாகக் கூறும்கல்வெட்டை இன்றும் சிதம்பரத்தில் காணலாம்.

"எவ்வுலகும் எவ்வுயிரும் ஈன்றும் எழில் அழியாச் செல்வியின் கற்றளிக்குத்" திருச்சுற்று மாளிகையை நரலோக வீரன் அமைத்தான். "முத்திறத்தார் ஈசன் முதல்திறத்தை பாடியவர் ஒத்தமைந்த செப்பேட்டினுள் எழுதித் தில்லை அம்பலத்தில் வைத்தனன்." 32

31. S. I. I. IV NO. 621

32. S. I. I. IV. NO. 225 Lines 17 and 21

இராசராசதேவர் காலத்தில் தேவாரங்களைக் கண்டு எடுத்த போது - சில சுவடிகள் செல் அரித்துப் போயிருந்தன. கிடைத்த வைகளைக் கொண்டு இராசராசனும் நம்பியாண்டார் நம்பியும் மூவர் முதலிகளின் தேவாரங்களை ஏழு தேவாரங்களாகச் செய்தனர். அவைகளும் ஓலைச் சுவடிகளில் தானே எழுதப்பட்டு இருக்கும். பிற்காலத்தில் இவைகளும் செல்லரித்துப் போய் விட்டால் என்ன செய்வது? எனவே ஏழு தேவாரங்களும் நிரந்தரமாக இருக்க வேண்டி, குலோத்துங்கனின் படைத்தளபதி நரலோகவீரன் - மூவரின் தேவாரங்களைச் செப்பேடுகளில் எழுதித் - தில்லையில் வைத்தனன். இது நடந்த காலம் கி. பி. 1100 எனலாம்.

தொகுத்து நோக்கினுல்

(1) மூவர் முதலிகளின் திருப்பதிகங்கள் இராசராச சோழன் காலத்தில் கி. பி. 1010-லிருந்து 1014-க்குள் ஏழுதிருமுறைகளாகத் தொகுக்கப்பட்டன. அவை தேவாரங்கள் என்று அழைக்கப்பட்டன. இதனை நம்பியாண்டார் நம்பி தொகுத்தார்.

(2) இராசாாசனின் மறைவிற்குப்பின் அவனது மகன் இராசேந்திர சோழன் காலத்தில் 1035-லிருந்து 1043-க்குள் திருவாசகம், திருவிசைப்பா, திருமந்திரம், திருமுகப்பாசுரம் ஆகிய நான்கையும் தேவாரத் திருமுறைகளுடன் சேர்த்துப் பதினெரு திருமுறைகளாகத் தொகுத்தனர். இதனையும் நம்பியாண்டார் நம்பியே செய்தனர்.

(3) கி. பி. 1100-இல் குலோத்துங்க சோழன் காலத்தில் மூவர் முதலிகளின் தேவாரங்கள் செப்பேட்டில் எழுதப்பட்டுத்தில்லை நடராசர் கோயிலில் வைக்கப்பட்டன. இத்திருப்பணியைச் செய்தவன் நரலோகவீரனுவான்.

சோதி வடிவாகக் கதிரவன் பிரகாசிக்கும்போது அண்டவெளியிலே எல்லாவற்றையும் உயிர்ப்பித்து உண்டாக்குகிருன். மேலே, கீழே, இடையிலே யாவும் இயக்கமுறுகின்றன. அதேபோல்சர்வகீர்த்தியுமுள்ள வழிபாட்டிற்குரிய இறைவன் - அந்த ஒரு பரம்பொருள், அவனது சுய இயல்பிலே எல்லாவற்றையும் மேலாட்சி செய்பவனுகத் திகழ்கிருன்.

— ஸ்வதஸ்வதராஉபநிஷத்.

சைவம் கண்ட பகுத்தறிவு

திரு. சி. முருகேசன் M. Sc; M. Phil,

மாமன்னர் கல்லூரி, புதுக்கோட்டை.

'பகுத்தறிவு' என்னும் சொல் இக்காலத்தில் தவருன ஒரு பொருளில் பயன்படுத்தப்படுகிறது. பகுத்தறிவாளர் என்பவர் கடவுள் நம்பிக்கை அற்றவர் என்ற கொள்கையே இன்று பரப்பப் பட்டு வருகிறது. கடவுள் நம்பிக்கைக்கும் பகுத்தறிவுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்பதைப் பலர் உணர்வதில்லை. நல்லவை எவை, தீயவை எவை? அறம் எது, அறத்திற்கு மாறுபட்டமறம் (பாவம்) எது? எது தேவையானது, எது தேவையற்றது? என்பதை ஆய்ந்தறிவும் அறிவே பகுத்தறிவு. கடவுள் உணர்வு என்பது தேவையானதும், அவசியமானதும் ஆகும். ஆனல் மூடநம்பிக்கை கள் தேவையற்றவை; ஒதுக்கப்பட வேண்டியவை. தேவையற்ற மூடநம்பிக்கைகளைச் சைவசமய ஆசிரியர்கள் என்றுமே ஒதுக்கி வைத்து, தூய பக்தி நெறியையே பரப்பினர் என்பதற்குப் பல சான்றுகளை நாம் காட்டமுடியும்.

திருஞானசம்பந்தர் :

திருஞானசம்பந்தரும், அப்பர்பெருமானும் திருமறைக்காட்டில் இருக்கும்பொழுது, பாண்டிய நாட்டிற்கு வரும்படி பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியாரிடமிருந்து, திருஞானசயபந்தருக்கு அழைப்பு வருகிறது. சமண இருள் அகற்றித் தூய சைவ ஒளி பரப்ப நாட்டம் கொண்ட ஆளுடையபிள்ளையார் பாண்டியநாடு செல்ல உடன் ஆயத்தமானர். அதுசமயம் அப்பரடிகள் ஞானசம்பந்தரிடம் சமணர்களின் கொடுமைகளை எடுத்துக்கூறியதுடன், 'நாளும், கோள்களின் நிலையும் சரியல்ல; தற்போது போகவேண்டாம்' என எச்சரிக்கிருர். அப்பர்பெருமானுக்குப் பதில்கூறும் வகையில் ஞானசம்பந்தர் பாடிய அருந்தமிழ்ப்பாக்களே 'கோளறு பதிகம்'. எல்லாம்வல்ல சிவபெருமானிடம் தூய அன்பும், பக்தியும் உடைய எவரும் நாளுக்கும், கோளுக்கும் அஞ்சவேண்டிய அவசியமில்லை என்பதை ஆணித்தரமாகவும், தெளிவாகவும் சம்பந்தர் கூறியது போல் யாரால் கூறமுடியும்?

''வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனல்

ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே ''

இறைவன் நம்உள்ளத்தில் கொலுவீற்றிருக்கும்போது எந்தக் கோளும் நமக்குத் தீங்கிழைக்காது, அவை நமக்கு நன்மையே செய்ய வல்லன என்பதைக் கோளறு திருப்பதிகத்தின் முதற்பாடல் தெளிவுபடுத்துகிறது.

'' என்பொடு கொம்பொ டாமை இவைமார் பிலங்க
எருதேறி ஏழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல் சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொ டேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே ''

இத்திருப்பாட்டில் வழிநடைக்கு ஆகாத நாட்கள் எனக்கருதப் படும் நாட்கள் அடியார்கட்கு நல்லனவாகவே முடியும் என்பது அழகாகக் கூறப்பட்டுள்ளது.

ஒன்பது = ஒன்பதாவதுநாள் (ஆயில்யம்); ஒன்பதொடு ஒன்று = பத்தாவது நாள் (மகம்); ஒன்பதொடு ஏழு = பதினாறுவது நாள் (விசாகம்); பதினெட்டு = பதினெட்டாவது நாள் (கேட்டை); ஆறும் = ஆறுவது நாள் (திருவாதிரை) உடனாய நாட்கள் = இவைகளோடு சேர்த்து எண்ணப்படும் மேலும் ஏழு நாட்கள் (பரணி, கார்த்திகை, பூரம், சித்திரை, சுவாதி, பூராடம் பூரட்டாதி) ஆகிய பன்னிரண்டு நாட்களும் சிவனை வழிபடும் அடியவர்களுக்கு நல்ல நாட்களே. நாட்களைக் குறிப்பிடச் சம்பந்தர் பெருமான் கையாளும் சொற்களின் நயம் எண்ணி எண்ணி வியக்கத்தக்கது; நம்மைச் சிந்திக்கவைப்பது.

இறைவனிடம் தூய அன்புசெலுத்தினால் போதும் கோள்களுக் காகப் பயப்படவேண்டியதில்லை. ' கிரஹசாந்தி ' செய்யவேண்டிய தில்லை. இவ்வளவு எடுத்துக்கூறியும் நமக்கு நம்பிக்கைவருமோ வராதோ என்று எண்ணிப் பதிகத்தின்திருக்கடைக்காப்பானகடைசி பாடலில் தான்பாடிய பாடல்களை நாளும் ஓதும் அடியார்கள் மேலான நிலையை எய்துவர் என்று ஆணையிட்டுச் சொல்கிறார் ஞானசம்பந்தர்.

" தேனமர் பொழில் கொள் ஆலை விளைசெந்நெல் துன்னி
வளர் செம்பொன் எங்கும் திகழ
நான்முகன் ஆதியாய பிரமாபுரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வார் ஆணை நமதே "

அருணகிரிநாதர் :

நாளும், வினையும், கோளும் நம்மை என்ன செய்துவிடமுடியும்? முருகன் அருள் முன்னிற்கும்போது நாளுக்கும், கோளுக்கும் அஞ்ச வேண்டிய அவசியம் என்ன? இது அருணகிரிநாதர் எழுப்பும் வினா. இவர் இன்னும் ஒருபடி மேலே சென்று பிரமன் நம்தலையில் எழுதிய எழுத்தையே முருகன் அருள்கொண்டு மாற்றிவிடலாம் எனப் பாடுகிறார்.

" நான் என்செயும் வினைதான் என்செயும் எனை நாடிவந்த
கோள் என்செயும் கொடுங்கூற்றென்செயும் குமரேசர் இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன்னே வந்து தோன்றிடினே "

" சேல்பட்டழிந்தது செந்தூர் வயற்பொழில் தேங்கடம்பின்
மால்பட்டழிந்தது பூங்கொடியார் மனம், மாமயிலோன்
வேல்பட்டழிந்தது வேலையும், சூரனும், வெற்பும், அவன்
கால்பட்டழிந்தது இங்கு என்தலைமேல் அயன் கையெழுத்தே "

— கந்தர் அலங்காரம்

ஊழ்வினையைக்கூட முயற்சியால் வென்றுவிடலாம் என்பார் தெய்வத்தமிழ்ப்புலவர் திருவள்ளுவர்.

" ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர். "

உமாபதிசிவம் :

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட வாக்கென்றால் தெய்வத்தன்மை பெற்றது என்றும், இன்று எழுதப்பட்டது என்றால் பெருமைக்குரியது அன்று என்றும் எண்ணும் ஒரு நிலை நம்மிடையே இருப்பதை நாம் மறுக்கமுடியாது. ஆயிரம் ஆண்டுகளுக்குமுன்

தோன்றியது பயன் அற்றதாகவும், இன்று தோன்றியது மாணிக்க மாகவும் இருப்பதற்கு வாய்ப்புகள் உண்டு. எதையும் தீரஆராய்ந்தே ஒரு முடிவுக்கு வரவேண்டும். தெளிந்தசிந்தனையுடையவர் உயர்ந்த இரத்தினக்கல்லினை மூடியிருக்கும் களங்கத்தைக் கண்டு அது குற்ற முடையது என நீங்கிவிடமாட்டார். அக்களங்கத்தை அகற்றிஅதன் உண்மைத் தன்மையைக் கண்டறியவே முயல்வர்.

"தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா; இன்று
தோன்றிய நூல்எனும் எவையும் தீதாகா; துணிந்த
நன்மையினர் நலங்கொள்மணி பொதியுமதன் களங்கம்
நவையாகா தெனஉண்மை நயந்திடுவர்; நடுவாம்
தன்மையினர் பழமை அழகு ஆராய்ந்து தரிப்பர்;
தவறுநலம் பொருளின்கண் சார்வு ஆராய்ந் தறிதல்
இன்மையினர் பலர்புகழில் ஏத்துவர்; ஏதிலருற்று
இகழ்ந்தனரேல் இகழ்ந்திடுவர் தமக்கென ஒன்றிலரே."

— சிவப்பிரகாசம்.

நல்லது எங்கிருப்பினும், என்று தோன்றியிருப்பினும் அதை ஏற்றுக் கொள்வதே அறிவுடையவர் இயல்பு என்பதை உமாபதி சிவா சாரியர் தமது நூலான சிவப்பிரகாசத்தில் குறிப்பிட்டிருப்பதை எண்ணி நாம் ஆழ்ந்து சிந்தித்துச் செயல்பட வேண்டும்.

மேற் குறிப்பிட்ட ஒரு சில எடுத்துக்காட்டுகள் 'சித்தாந்த சைவம்' நமக்கு உணர்த்தும் பகுத்தறிவுக்கொள்கைகள். இவற்றின் மூலம் பகுத்தறிவோடு கூடிய பக்தி நெறியே சைவநெறி என்பதும், அதுவே தமிழர்நெறியுமாகும் என்பதும் நன்குவிளங்கும்.

ஒரு விதை இன்றி முளை முளைத்து எழாது. ஒருவன் தன் சுகவாழ்வுக்கு வழி ஏற்படுத்தும் காரியங்களைச் செய் திருக்கவில்லை என்றால் அவன் சுகமான வாழ்வைப் பெற்று வாழமுடியாது.

— மகாபாரதம் (சாந்திபருவம்)

★

எந்த ஒரு மனிதன் பிறரைக் கொடுமைப்படுத்தும் காரியத்திலிருந்து தன்னை விலக்கிக்கொள்ளுகின்றானோ அவன் சதாகாலமும் சக்தி பொருந்திய வேள்வி செய்பவ னாகிறான்.

— மகாபாரதம் (அனுசாசனபருவம்)

அத்தி

திரு. P. புலியூர் உடையான்

இது மர வகுப்பைச் சேர்ந்தது. மரத்தின் மேற்பட்டை வெளுத்தும், பிளவுபட்டும், சுரசுரப்பாயுமிருக்கும். அடிமரமுதல் உச்சிக்கிளை வரை காய்காய்க்கும். பூவைக்காண்பது அரிது. இதனால்தான் நீண்ட இடைவெளிக்குப்பின் ஒருவரைச் சந்தித்தால் 'அத்திபூத்தது போல் இருக்கிறதே' என்று கூறுவர்.

காய் அடிப்புறம் சிறிது குவிந்திருக்கும், மத்தியில் ஒருசிறு துளையும் அதைச்சுற்றிச் செந்நிறக் கோடுமிருக்கும். பழுத்தவுடன் செந்நிறமாகமாறி, அதனுள்சிறுவிதைகளும்பூச்சிகளும்அடங்கியிருக்கும்.

மருந்துண்ணுங் காலங்களில் இதைப் பத்தியப்பொருளாய் வழங்குவதுண்டு. சுவை : துவர்ப்பு. தன்மை : தட்பம். பிரிவு: இனிப்பு.

குணம் :

துவர்ப்புடைய அத்திப்பிஞ்சு மூலவாயு, மூலக்கிராணி, இரத்தமூலம், வயிற்றுக்கடுப்பு ஆகியவைகளைப் போக்கும்.

மூலக் கிராணியறும் மூலவிரத்தந் தீரும்
சாலக் கடுப்புந் தரிக்குமோ! — மாலரவத்
துத்திப் படவல் குற்றேகாய்! துவர்ப்பையுறும்
அத்திச் சிறுபிஞ்ச ருந்து.

அத்திப் பிஞ்சு, வேலம் பிஞ்சு, மாம்பட்டை, சிறுசெருப்படை இவைகளை ஒரு அளவில் கொண்டு வாழைப் பூச்சாற்றில் குடிநீரிட்டுக் குடிக்க வயிற்றுக் கடுப்பு, சீதக்கழிச்சல் போம்.

காயின் குணம் :

வெள்ளை, வாதநோய், சூலை, உடல் வெப்பு, புண் ஆகியவைகள் போகும்; மலச்சிக்கல் நீங்கும்.

பழத்தின் குணம் :

குருதியைப் பெருக்கும். அத்திக் காயைச் சமைத்து உணவாய் உண்டால் உடலிலுள்ள பிணிகள் நீங்கும். மலச்சிக்கல் நீங்கும்.

அத்திப்பால் :

குணம்: பித்தகோபம், நீரழிவு, சூலைஆகியவைகளைப்போக்கும். வெண்ணெய் அல்லது சீனியுடன் கலந்துண்டால் இரத்தபேதி, பெரும்பாடு, வெள்ளை, நீரழிவு ஆகிய பிணிகள் நீங்கும.

பட்டையின் குணம் :

கீழ்வாய்க் கடுப்பு, குருதிப் போக்கு, சீதக் கழிச்சல், நாற்ற முள்ள புண்கள் ஆகியவைகளைப் போக்கும .

அத்திப் பட்டையைப் பசுவின் மோர்விட்டு இடித்துப் பிழிந்த இரசத்தைத் தினம் ஒன்றுக்கு இரண்டுமூன்றுமுறை அரைமுதல்ஒரு ஆழாக்கு வரை அருந்தப் பெரும்பாடு நிற்கும்.

ஆதாரம் :- பொருட் பண்பு நூல் பயிர்வகுப்பு
குணபாடம் (மூலிகை வகுப்பு)

இயற்றியவர் :- வைத்திய இரத்தினம்,
திரு. க. ச. முருகேச முதலியார் அவர்கள்.

அண்ணல் காந்தியடிகளின் பொன்மொழிகள்

1. கடவுளிடம் நம்பிக்கைவைத்துக் கடவுளுக்கு மட்டுமே அஞ்சி நடப்போமானால் எவருக்கும் நாம் அஞ்சவேண்டியதில்லை.

2. அரசியலாரும் தேசமும் மனித சமுதாயமும் கடவுள் நெறியில் நிற்கிறவரையில்தான் இராஜ பக்தியோ தேசபக்தியோ இருக்கமுடியும்!

3. பிரார்த்தனை என்பது எனக்கு மனோபலத்தை அருளும் ஓர் அகச்சாதனம்! உபவாசம் என்பதோ என் உடலைத்தாங்கும் ஊன்றுகோலாய் விளங்கும் புறச்சாதனம்!

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத்திருநாளில் திங்கள் தோறும் தேவாரப் பாடல் பெற்ற தலங்களில் சிறப்பு வழிபாடுகள் நிகழ்ந்து வருகின்றன. ஆடித்திங்கள் 32ஆம் நாள் 16—8—85 வெள்ளிக்கிழமையன்று நடுநாட்டுத்தலங்களுள் ஒன்ருன திருவண்ணுமலை அருள்மிகு அருணசலேசுவரர் ஆலயத்தில் சிறப்பு வழிபாடு நிகழ்வுற்றது. விசேஷ அபிஷேக ஆராதனைகளும் திருப்பதிகப் பாராயணமும் நிகழ்த்தப் பெற்றன. 'திருவண்ணுமலைத் திருப்பதிகங்கள்' என்ற நூல் வெளியிடப்பெற்றது. தருமையாதீனத் தமிழ்ப் புலவர், வித்துவான் திரு. வி. சா. குருசாமிதேசிகர், எம். ஏ., உரையாற்றினர். அன்பர்பலர் வழிபாட்டிற்கலந்து கொண்டு பயனுற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமையாதீனத் திருமடத்தில் ஒவ்வொரு ஆங்கிலமாத முதல் ஞாயிறன்றும் காலை சரியாகப் பத்துமணிக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தை அன்பர்கள் வணங்கி வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனை வழிபாட்டுக் கூட்டம் நிகழ்ந்துவருகின்றது. 1—9—85 அன்று 51 ஆம் அருளுபதேசம் நிகழ்வுற்றது.

முதலில் குருவழிபாடும் பிரார்த்தனையும் நிகழ்ந்தன. அடுத்துத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் திருத்தொண்டர் புராணச் சிந்தனையாகத் திருஞானசம்பந்தர் பொற்ருளம்பெற்றமை முதல் மூன்ரும் தலயாத்திரை முடியஅமைந்த பகுதிகளைத்தேவாரப் பதிகங்களோடு இயைத்துவிளக்கம் அருளினர்கள். 'திருக்கோலக்காவிலுள்ளகோயிற்பெயர் தாளமுடையார் கோயில்என்பது; அம்பிகை பெயர் ஓசைகொடுத்தநாயகிஎன்பது. இத்திருப்பெயர்கள்திருஞான சம்பந்தர் அத்தலத்துக்கு எழுந்தருளியபின் உண்டானவை' என அருளியமை ஆய்வுநோக்கோடு அமைந்தது. ஞானப்பாலுண்டு திருப்பதிகங்கள் பாடியருளியமை கண்ட ஊரார் - தொண்டர்கள் சீகாழிப்பிள்ளையாரைப் பாராட்டியமைக்குச் சிறப்பான விளக்கம் அளித்துத் தொகுத்துரைத்தார்கள். தலபுராணம், தேவாரம்,

திருக்குறள் முதலியவற்றின் இணைப்பாக உலகியல் நிலையினர்க்கு ஏற்ப அருளிய இனிய அருளுபதேசம் அன்பர்கட்குப் பெருவிருந்தாய் அமைந்தது. அன்பர் பலர் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

அடுத்து 52ஆம் அருளுபதேசம் 6—10—85 அன்று நிகழ்வுறும். அன்பர்கள் கலந்துகொண்டு பயன் பெறுக.

மகாகயிலாயக்காட்சி

ஸ்ரீ அப்பர் சுவாமிகள் கயிலைகண்டநாளாகிய ஆடி அமாவாசை யன்று திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் இருபத்தைந் தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணிகள் தரிசித்த மகா கயிலாயக்காட்சி - இருபத்தாறும் ஆண்டுவிழா 16—8—85 வெள்ளிக்கிழமையன்று மிகச்சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் பூசைமடத்தில் திருக்கயிலாயத் திருவுருவப் படத்திற்குக் காலை, மாலை இருவேளைகளிலும் சிறப்பு வழிபாடு நிகழ்த்தினர்கள். பண்ணிசைவாணர்களால் திருமுறைப் பாராயணம் அகண்ட பாராயணமாக நடைபெற்றது. நண்பகல் 1 மணிக்கு மாகேசுவர பூசை நிகழ்ந்தது.

மாலை 6 மணியளவில் பூசை மடத்தில் திருக்கயிலாயச் சிந்தனை என்னும் பொதுத்தலைப்பில் வித்துவான் திருமதி ப. நீலா எம். ஏ., எம். ஃபில். 'திருஞானசம்பந்தர்' பற்றியும் திரு. சா. கிருஷ்ண மூர்த்தி, எம். ஏ., 'திருநாவுக்கரசர்' பற்றியும் வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன், எம். ஏ. பி. எட்., 'சுந்தரமூர்த்தி சுவாமிகள்' பற்றியும் புலவர் திரு. கே. கணபதி, பி. லிட். 'சேக்கிழார்' பற்றி யும் விரிவுரையாற்றினர்.

இரவு, வண்ண விளக்குகள் கொண்டு அலங்கரிக்கப்பட்ட வெள்ளிரதத்தில் பண்ணிசைவாணர்களின் திருமுறைப் பாராயணத் துடன் திருக்கயிலாயத் திருவுருவப் படத் திருவீதியுலா சிறப்பாக நிகழ்வுற்றது. திருக்கயிலாய நிலையத்தில் தரிசன வழிபாடு நிகழ்ந் தது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் அன்பர்கள் புடைசூழத் திருவுலாப் போந்தருளினர்கள். அன்பர்கள் வழிபட்டுப் பயனடைந் தனர்.

ஆவணிமூலவிழா

தருமையாதீனத்தில் 23, 24, 25—8—85 வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று நாட்களிலும் ஆவணிமூலப் பெருவிழாவும்

ஆதீனக் கல்விநிலையங்களின் ஆண்டுவிழாவும் மிகச்சிறப்பாக நடைபெற்றன. விழாநாட்களில் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானங்களின் ஆன்மார்த்த மூர்த்தியாக விளங்கும் ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் சிறப்பாக நடைபெற்றன.

25—8—85 ஞாயிறன்று - ஆவணிமூலத் திருநாளன்று காலை ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்குச் சிறப்பு வழிபாடு நிகழ்ந்தது. 'விநாயகர் அகவல்' (தெளிவுரையுடன்) என்ற நூல் வெளியிடப் பெற்றது.

ஆவணி மூல நாளில் ஆண்டுதோறும் அறிஞர் ஒருவருக்குச் சிறப்புப்பட்டம் அளித்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் ஆசி அருள்வார்கள். இதுவரை முப்பத்துநான்கு அறிஞர்கள் பட்டம் பெற்றுள்ளனர். இம்முறையில் ஆவணிமூல நன்னாளன்று மாலை வழிபாட்டின்போது சென்னை, திருமதி, சௌந்தராகைலாசம் அவர்களுக்குச் 'செந்தமிழ்க் கவியரசி' என்னும் பட்டம் பொறித்த பொற்பதக்கம் அளித்துப் பொன்னாடை போர்த்துவித்து ஆசி வழங்கினார்கள்.

தென்னைமரங்களுக்கு அனுபவ முறையில் - ஊட்டச்சத்துச் செலுத்தி நல்ல காய்ப்பு உண்டாக்கும் குத்தாலம் திரு. எஸ். முத்தையாசேட் என்பவருக்குத் 'தென்னைமருத்துவநிபுணர்' என்ற பட்டம் பொறித்த வெள்ளிப்பதக்கம் அளித்துப் பட்டாடைப்போர்த்தினார்கள். (இவர் அனுபவமுறை ஆதீனத் தென்னந் தோப்புக்களில் சோதனைக்குட்படுத்தப்பட்டதில் நற்பலனைத்தந்தது என்பது குறிக்கத்தக்கது).

தருமையாதீனக் கல்விநிலையங்களின் ஆண்டுவிழா ஆவணிமூல விழாவையொட்டி மூன்றுநாட்கள் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் நிகழ்வுற்றது.

ஸ்ரீ கயிலைக் குருமணி பாலர்பள்ளி, ஸ்ரீகுருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி, ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி ஆண்டு விழா 23 8—85 வெள்ளிக்கிழமையன்று சேரர் திருநாளாகக் கொண்டாடப்பட்டது. சேரன்செங்குட்டுவன், இளங்கோ அடிகள், சேரமான்பெருமாள்நாயனார் என்ற தலைப்புக்களில் ஆதீனப்பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர்கள் சொற்பொழிவாற்றினர்.

தேவாரப் பாடசாலை, வேதசிவாகம பாடசாலை ஆண்டுவிழா 24—8 85 சனிக்கிழமையன்று சோழர் திருநாளாக நிகழ்வுற்றது. புகழ்ச்சோழர், மனுநீதிச்சோழர் பற்றி ஆதீனப்பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர்கள் சொற்பொழிவாற்றினர்.

தருமையாதீனப் பல்கலைக்கல்லூரி, சைவசித்தாந்தக்கல்லூரி ஆண்டுவிழா 25—8—85 ஞாயிறன்று பாண்டியர் திருநாளாக மாலை 7 மணியளவில் நிகழ்வுற்றது. இறைவணக்கத்தையடுத்து ஆதீனக் கல்விநிலையங்களின் ஆண்டறிக்கைகள் படிக்கப் பெற்றன.

தருமையாதீனம் 26ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அருளாசி வழங்கினார்கள்.

டாக்டர் திரு இரா. செல்வக்கணபதி அவர்கள் 'அரிமர்த்தன பாண்டியன்' என்னும் தலைப்பில் உரைநிகழ்த்தினர். 'செந்தமிழ்க் கவியரசி' என்னும் பட்டம்பெற்ற திருமதி. சௌந்தராகைலாசம் அவர்களைப் பாராட்டித் தருமையாதீனத் தமிழ்ப்புலவர் திரு. வி. சா. குருசாமிதேசிகர். எம். ஏ. அவர்கள் உரையாற்றினர்.

'செந்தமிழ்க்கவியரசி' திருமதி. சௌந்தராகைலாசம் அவர்கள் குருவருள் திறத்தைப் போற்றி, குருமணிகளின் அருளுருவத் தெய்விகத்தைப்பற்றிக்குறிப்பிட்டார்கள், குருமணிகள்சொக்கநாதர் பூசையாற்றும் திறத்தைப் போற்றித் துதித்துத் தம் நன்றிப் பெருக்கைப் புலப்படுத்திக் கொண்டார்கள். விழாவில் அறிஞர்களும் அன்பர்களும் கலந்து கொண்டனர். திருமுறை இன்னிசை நிகழ்ச்சியுடன் விழா இனிது நிறைவுற்றது.

நாயன்மார் குருபூஜைத் திருநாள்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில் ஆடித்திருவாதிரை நாளில் (12—8—85) கூற்றுவ நாயனார், ஆவணி அனுஷநாளில் (23—8—85)குலச்சிறைநாயனார், மூலநாளில் (25—8—85) குங்குலியக் கலயநாயனார் குருபூஜைகள் சிறப்பாக நடைபெற்றன. குருபூஜை நாட்களில் ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு அர்ச்சனை வழிபாடுகள் நிகழ்த்தப்பெற்றன. வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம். ஏ., பி. எட்., புராணம் வாசித்து வரலாறு கூறினர். ஆகமபாடசாலை, தேவாரப்பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் அன்பர்களும்கலந்துகொண்டு பயன் பெற்றனர். புராண விரிவுரைக்குப்பின் அன்பர்கட்குப் பிரசாதம் வழங்கப்பெற்றது.

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் வேளூர் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

11—8—85 ஞாயிறு மாலை 6-30 மணியளவில், நிலையத்தில் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமி படத்திற்கு அருச்சனை, தீபாராதனை செய்தபின், நிலைய ஓதுவார் சாமிதண்டபாணி, தேவார இசைமணி புலவர் திரு. N. இராமலிங்கம், திருமுறைத் தொண்டர் திரு. N. இராமமூர்த்தி அய்யர் ஆகியோர் புள்ளிருக்கு வேளூர்ப் பதிகங்களையும், முருகன் நாமாவளிகளையும் பாடினர்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் அருளாசியால் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா போன்ற பல்வேறு விழாக்களும்சிறப்பாகச் சென்னையிலும் பிற இடங்களிலும் நடைபெற்று வருகிறது என்றும், வையத்துள் வாழ்வாங்கு வாழ விழைவோர், சமயத்தோடு ஒட்டி ஒழுகிச் சமயாசாரியர்கள் காட்டிய வழியில், மனமுருகி, இறைவனை எண்ணி, எண்ணி வழிபட்டுய்ய வேண்டுமென்றும் வரவேற்புரையில் நிலைய சுவாமிகள் குறிப்பிட்டார்கள்.

சமய நூல்களை ஆழ்ந்து படிப்பதோடு அவ்வழியில் ஒழுகி, அன்பு ஒளிர, ஒளிர இறைவன் அருள் செய்வான் என்றுசிறப்புரையாற்றிய திரு. ஆங்கீரச வேங்கடேச சர்மா அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

டாக்டர் செல்வி. சிவ. பார்வதி அவர்கள் நிலைய அன்பர் களோடு தலயாத்திரை சென்று சுவாமி தரிசனம் செய்தபோது, நிகழ்ந்த சிறப்பு நிகழ்ச்சிகளைச் சுருக்கமாக எடுத்துரைத்து நன்றி கூற, விழா இனிது நிறைவுற்றது.

நாவலரின் நல்லுரைகள்

அன்பும், பொறுமையும், வாய்மையும், தூய்மையும் உண்டானால் சகல கருமங்களும் சித்திக்கும். கடவுளுடைய அருளும் வாய்க்கும்.

★

ஒருவனுக்குப் பணிவுடைமையும் இன்சொல்லுமே ஆபரணங்களாகும். அதுவன்றிக் கழுத்தில் அணியும் பொற்சங்கிலியும், மணிக்கட்டில் கடிகாரமும், விரலில் வைரக்கல் மோதிரமும் ஆபரணங்கள் ஆகமாட்டா.

★

கற்றறிந்தாரிடத்துள்ள வறுமையைக்காட்டிலும் கல்லாதவரிடமுள்ள செல்வம் துன்பம் செய்யும்.

— சந்மார்க்கபோதினி.

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(குரோதனஸு புரட்டாசிமீ 1உ முதல் 30உ முடிய)
(17—9—1985 முதல் 16—10—1985 முடிய)

ஸ்ரீ குரோதன ஸு ஆவணி மீ 31உ சோமவாரம் சித்திரை நக்ஷத்திரம் தைதுலை கரணம் கூடியகாலத்தில் சூரியஉதயம் முதல் 56 நாழிகை 50 வினுடிக்கு சிம்மலக்கினத்தில் ஸ்ரீலோகரட்சகரான சூரியபகவான் லோக மாந்தர்கள், தீக்ஷண்ய ஞானத்தில் உயர்ந்து உய்யும்பொருட்டுச் சிம்மராசியிலிருந்து கன்னியாராசி சங்கிரமணமாகப் புரட்டாசிமாதப் பிரவேசம் செய்தருகின்றுர். மறுதினம் புரட்டாசிமீ 1உ மங்களவாரம் ஷடசீதிபுண்ணிய காலமாகும். சங்கிரமண கால கிரகஸ்திதியினுல் தேசங்களில் தொழில் அறிஞர்கள் விஞ்ஞான அறிஞர்கள் உபயோகப் பொருள்கள் மற்றும் தொழில் சுலப சாதனங்களின் புதுமைப்படைப்புகளை வெளியிடுவர். கல்விச்சாலைகளில் தொழில் மூலம் கல்வி போதனை நடந்து கற்போர் செயலாற்றும் திறமை மிக்கவராவர். கலைஞர்களின் ஓவியம் சிற்பம் கட்டடக்கலை இசை நடனம் ஆகிய கலைகள் உலகில் எழில் மிகுந்து விளங்கும். எல்லா பிரஜைகளும் தம் புத்தி சக்தியால் செயல்கள் புரிந்து முன்னேற்ற ஸ்திதியில் விளங்குவர். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் திருத்தோற்றம் பொலிவுற்று விளங்குகின்ற சிவஞான குருமகான்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானங்கள் ஜகத்குருமகான்கள் லோகத்திற்கு மனுநீதி தர்மம் சைவ சித்தாந்தம் இறைபக்தி ஆகியவைபற்றி வியாக்கியானம் செய்து அருள்வார்கள். திருக்கோயில்களில் சிறப்புடன் பூசனைகள் நடைபெறும். மாந்தர்கள் இறைவனைத் துதித்து நற்கிரியைகள் புரிந்து நற்பாக்கியத்துடன் பிறர் நலம்பேணும் பரந்த நோக்கில் செவ்விய வாழ்க்கை நடத்துவர்.

1. மேஷம் :- அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். நல்ல பண வருமானம் வந்துகொண்டிருக்கும். வித்தியா வியாபாராதி

கலைத்துறைகள் மற்றும் ஒப்பந்த லேவா தேவிகள் பெருமதிப்பில் நடந்துகொண்டிருக்கும். அரசாங்கத்தில் கௌரவ ஸ்திதியை ஏற்படுத்தும். எல்லாக் காரியங்களும் செவ்வையாக நடக்கும். வீடு வாகனங்களில் நல்ல சௌகரியம் தரும். தாரபுத்திரர்களின் நலம் நன்ருக இருந்து வரும். செப்டம்பர் 19, 20, 21 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய் புதன் சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீரிஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். பண வருமானம் கண்யஸ்திதிக்கு ஏற்ப வந்து கொண்டிருக்கும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் பிரசித்தம் ஏற்படும். எழுத்துமூல விஷயங்களில் அரசாங்கத்திலிருந்து நன்மை ஏற்பட்டு வரும். வீடுவாகனப் பிராப்தியில் சீர்திருத்தம் ஆகும். தெய்வபலத்தில் எல்லாக் காரியங்களும் நல்ல விதத்தில் நடந்துகொண்டிருக்கும். செப்டம்பர் 22, 23 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன் வெள்ளி சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். பண வருமானங்கள் நல்ல விதத்தில் வந்து கொண்டிருக்கும். சகோதரருக்கு உயர்வு தரும். நல்ல பூஷணம் தரும். நவீன வஸ்துவின் பிராப்தியையளிக்கும். வீடுவாகனங்களில் நல்ல சௌகரியம் தரும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் ஒப்பந்த லேவா தேவிகளில் நற்பலன் தரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருகஇருந்துவரும். செப்டம்பர் 24, 25தேதிகள் சந்திராஷ்டமம். சனி ஞாயிறு சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். இயந்திர சாதனங்களில் பூமிபிராப்தியில் விருத்திபலன் ஏற்படும். வித்தியா வியாபாராதிகளில் கலைத்துறையில் நற்பலன் ஏற்பட்டுவரும். எல்லாக்காரியங்களும் கௌரவ ஸ்திதியில் சிறப்பாக நடந்துவரும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். செப்டம்பர் 26, 27 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள் செவ்வாய் சுபம்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் சுப பலனுகநடக்கும். பணவருமானம் கணிசமாகவரும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் சிறப்புத்தரும்.

அரசாங்கத்திலிருந்து நற்செய்திவரும். வீடுவாகனங்களில் நல்ல சௌகரியம் தரும். புத்திரர்களின் கல்வி கலை தொழில்துறைகளில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். எல்லாக்காரியங்களும் ஊக்கத்துடன் செயல்பட்டுக் கொண்டிருக்கும். செப்டம்பர் 28, 29, 30 தேதிகளில் சந்திராஷ்டமம். புதன் வியாழன் சுபம்.

6 கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் வந்துகொண்டிருக்கும். கௌரவ ஸ்திதியில் சகோதரர் ஸ்திரி வழியினர்களில் அவசிய செலவினங்களையும் ஏற்கும். மிக நெருக்கடியான பிரச்சினைகள் ஏற்படுதலும் சமயோசித புத்தியினால் சமாளித்தலும் ஆகும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். அக்டோபர் 1, 2 தேதிகள் சந்திராஷ்டாமம். வெள்ளி சனி சுபம்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானங்கள் இரண்டு வகையில் வந்துசேரும். அதற்கேற்றபடி தொழில் துறைகளில் விளம்பரம் ஆகியவற்றில் கௌரவ விஷயங்களில் செலவும் ஆகும். பூமியில் அபிவிருத்தி ஏற்படும். புதிய வாகனம் தரும். எல்லாக்காரியங்களும் வெற்றிகரமாக நடந்துகொண்டிருக்கும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். அக்டோபர் 3, 4, 5 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு திங்கள் சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். பண வருமானம் இரண்டு வகையில் வரும். பூமியில் இயந்திரங்களில் முதலீடும் செய்யும். சகோதரருக்கு விசேஷநன்மையைஏற்படுத்தும். வீடுவாகனங்களில் நல்ல சௌகரியம் தரும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாகஇருந்துவரும். எல்லாக் காரியங்களையும் கெடியாக நடத்தும். அரசாங்கத்தில் கௌரவம் தரும். அக்டோபர் 6,7தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய் புதன் சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர் ராசி 9பாதங்களும் சுபபலனாக நடக்கும். பணவருமானம் மூன்றுவகையில் வந்துசேரும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் பிரசித்தம் ஏற்படும். இயந்திரசாதனம் புதுமை வஸ்துக்கள் வாங்குதல் ஆகும். எல்லாக்காரியங்களும் அரசகண்யத்தில்ஜெயபிராப்தியாக நடக்கும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். அக்டோபர் 8, 9 சந்திராஷ்டமம். வியாழன் வெள்ளி சுபம்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் மிச்சிரபலனை நடக்கும். பணவரு மானம் வெகுவாக வரும். உடன் சமச்செலவாகும். அக்டோபர் 2 தேதிக்குபின் ஓர் பெரும் பொருள் கைக்கு வந்துசேரும். இயந்திரங் களில் அபிவிருத்தி ஏற்படும். தேக்கமாக இருந்த எல்லா அலுவல் களும் விரைவில் செயல்படும். தாரபுத்திரர்களின் நலம் நன்ருக இருந்து வரும். அக்டோபர் 10, 11 தேதிகள் சந்திராஷ்டமம். சனி ஞாயிறு சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிரபலனை நடக்கும். பண மானம் வரும். பொதுநலக்காரியங்கள் பரோபகாரம் இவற்றில் செலவும் ஆகும். வித்தியா வியாபாராதிகலேத்துறைகளில் பிரபலஸ் திதி ஏற்படும். வீடுவாகன பிராப்தியில் நல்ல சௌகரியம் தரும். தாம்பத்திய வாழ்வில் பிணக்கு ஏற்படினும் தெய்வஅருளில் சந்தோஷம் நிலவும். புத்திரர் பௌத்திரர்களுக்கு சௌக்கியம் தரும். அக்டோபர் 13, 14 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய் புதன் சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனை நடக்கும். பணவரு மானம் வெகுவாக வரும், சகோதரர் சகோதரிகளுக்கு சௌக்கிய பலன் தரும். வீடுவாகன பிராப்தியில் நவீனம் பொருந்தும். தயக்க மாக இருந்த எல்லாக்காரியங்களும் விரைவில் நடந்தேறும். அக்டோபர் 2 தேதிக்குமேல் எல்லா விஷயங்களிலும் சாதகமான பலனை ஏற்படுத்தும். தாராபுத்திரர்களின் நலம் நன்ருக இருந்து வரும். அக்டோபர் 15, 16 செப்டம்பர் 17, 18 தேதிகள் சந்திராஷ் டமம். ஞாயிறு திங்கள் சுபம்.

ஸ்ரீலஸ்ரீ குருமணியின் அருள்மொழி

வரப்பிரசாதம்

துன்பம் வரும்போதுதான் மனிதன் தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபடுகிருன்; இறைவனை எண்ணுகிருன். இன்பம் வரும் போது எண்ணுவது இல்லை, தங்கம் தணலிலே உருக்கப்பட்டு இறுதியில் ஆபரணமாக விளங்கும்போதுதான் அதன் பெருமை உயர்கிறது. அதேபோலத் துன்பத்தில் உழன்றுஉழன்று அவைகளோடு போரிட்டு வெற்றி கண்ட மனிதன்தான் வீரனுகவும் விவேகியாகவும் விளங்குகின்ருன். அவனுல்தான் நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் பயன் ஏற்படும். துன்பத்தைக் கொடுத்துத்தான் மனிதர்களைத் தூய்மைப்படுத்துகிருன் இறைவன். எனவே துன்பம் வந்தபோது துவண்டுவிடாது அதை வரப்பிரசாதமாக ஏற்கவேண்டும்.

மதிப்புரை :

திண்ணபுர அந்தாதி

(‘ செஞ்சொல் விளக்கம் ’ என்ற உரையுடன்)

[பதிப்பு :- தமிழ் வளர்ச்சிக் கழகம், காரைநகர் (ஈழத்துச் சிதம்பரம்) இலங்கை. உரையாசிரியர் ;- டாக்டர் திரு. சொ. சிங்காரவேலன், M. A., Ph. D., Dip in Ling. தமிழ்ப்பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மயிலாடுதுறை. கிடைக்குமிடம் :- ஸ்ரீகாசி மடம், திருப்பனந்தாள். விலை ரூ. 5—00.]

ஈழநாட்டுச் சிதம்பரம் எனப் போற்றப்படுவது திண்ணபுரம். இத்தலத்தில் கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள அருள்மிகு சௌந்தராம்பிகை உடனுறையும் சுந்தரேசுவரப்பெருமான்மீது பாடப்பட்ட அந்தாதி இலக்கியம் திண்ணபுர அந்தாதி. இதனை இயற்றியவர் காரைநகர்க் கார்த்திகேயப் புலவர். இந்நூலின் மூலம்மட்டும் முதற்பதிப்பாக முன்னர் வெளிவந்துள்ளது. இதனைச் சிறந்த உரையோடு வெளியிடவேண்டும் என்னும் விருப்பம் சிவநெறிச் செல்வரும் காரைநகர் தமிழ்வளர்ச்சிக்கழகச் செயலாளரும் ஆகிய சிவத்திரு. வைத்தீசுவரக் குருக்கள் அவர்கட்கு இறையருளால் எழுந்தமையின் விளைவாக இவ்வரிய நூலைத் தமிழுலகம் பெற்றுள்ளது. இந்நூலினைத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர் ‘கயிலை மாமுனிவர்’ ஸ்ரீமத் காசிவாசி சுவாமிகள் அருளாசி வழங்கிப் பாராட்டியுள்ளார்கள்.

இந்நூலின் உரையாசிரியர் தம் உரையில் செஞ்சொற்களைக் கொண்டு விளக்கம் தந்து‘ செஞ்சொல் விளக்கம் ’ என்பதனை நிறுவியுள்ளார். பாடல்களுக்குத் தலைப்பிட்டுக்கருத்துச்சுருக்கம் காட்டுவது இவ்வுரையாசிரியர் சிறப்பு. சாத்திரம், திருமுறை, நீதிநூல்கள், இலக்கியங்கள், இலக்கணங்கள் எனும் அமைப்புடைய 36க்கு மேற்பட்டநூல்களிலிருந்து மேற்கோள்களைப் பொருந்தக்காட்டியுள்ளமை இவர் தம் பரந்த அறிவாற்றலை வெளிக்காட்டுகின்றது.

ஐந்து தருவளர் சொர்க்கம், ஐம்முகம், பதினறுபேறு, முப்பத்திரண்டறம் முதலிய தொகைச் சொற்களுக்கு விளக்கம் தந்துள்ளமை சிறப்பாக உள்ளது. (எ-டு) பக் 73. ஐந்துதரு-அரி சந்தனம், கற்பகம், சந்தனம், பாரிஜாதம், மந்தாரம். 78-ஆம் பாடல் உரையில் வடசொற்களை ஏற்றுத் தமிழிலக்கியம் செய்த நூலாசிரியரின் பான்மையைப் பாராட்டியிருப்பது இவர் சிறந்த உரையாசிரியர் என்பதோடு நல்ல இலக்கியத் திறனாய்வாளர் என்பதையும் காட்டுகிறது.

சிறப்பான சொற்களுக்கு விளக்கம், தேவையான இலக்கணக் குறிப்புக்கள், நூலின் இறுதியில் அமைந்த அரும்பொருள் அகராதி ஆகியவை மிகவும் பயன் நல்குவனவாய் ஆய்வுநோக்கில் அமைந்து சிறக்கின்றன. இருபதாம் நூற்றுண்டின் இனியஉரையாசிரியராகத் திகழும்டாக்டர் திரு.சொ. சி. யின் திண்ணபுரஅந்தாதி 'செஞ்சொல் விளக்கம்' சைவமும் தமிழும் தழைக்க உதவும் சீரிய நூல். கற்றுப் பயனடைய வேண்டுவது சைவத்தமிழுலகின் கடமை.

— கா. ம. கண்ணப்பன்.

கடிதம் :

தருமையின் ஞானவேந்தர் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கட்குச் சிரம்தாழ்த்திய பெருவணக்கம் உரியதாகும். வழக்கம் போல் ஞானசம்பந்தத்தில்-சிறப்புவிழாக்களில் பங்கேற்று ஆசியுரை வழங்கும் மகாசந்நிதானம் அவர்களின் கருத்து, மிகமிகப்போற்றக் கூடியது. குறிப்பாக 22—7—85 சீகாழியைச்சேர்ந்த மாதானத்தில் வழங்கியருளிய ஆசியுரை கல்வெட்டுக்களில் பொறித்துவைக்க வேண்டியது என்ருல் மிகையாகாது. அதனை விவரிக்கும் ஆற்றல் எனக்கு இல்லை. ஆனுல் அவ் ஆசியுரையை அனுபவித்து ரசிக்கும் தன்மை எனக்கு ஏற்பட்டது. நான்கொண்ட கருத்தினையே ஞான சம்பந்தம் படிக்கும் அத்துணைப்பேரும் கூறுகிருர்கள். இதனைத் தனி யாகவே பொதுமக்கள் படிக்கும்நிலையில் ஒரு சிறுநூலாக வெளியிட வேண்டுகிறேன். ஒவ்வொரு தலைப்பும் மனதிலே பதிந்துவிட்டது. இது அனைவருடைய எண்ணமாகும். இதனை நேரிலேயே விண்ணப் பிக்க விரும்பினேன். ஆனுல் அதற்கான சமயம் அமையவில்லை.

குத்தாலம் பாலு.
16—8—85.

மகேசுவர மூர்த்தங்கள் – 25

லிங்கோற்பவர், சுகாசனர், உமாமகேசர், கலியாணசுந்தரர், அர்த்தநாரீசுவரர், சோமாஸ்கந்தர், சக்ரவரதர், திரிமூர்த்தி, ஹரிஅர்த்தர், தட்சிணமூர்த்தி, பிட்சாடனர், கங்காளர், காமாரி, காலாரி, சலந்தராரி, திரிபுராரி, சரபர், நீலகண்டர், திரிபாதர், ஏகபாதர், பயிரவர், இடபாருடர், சந்திரசேகரர், நடராஜர், கங்காதரர்.

அனைத்துலகச் சைவசித்தாந்த
ஆராய்ச்சி நிறுவனம்
இதழ்வழிச் சைவசமயப் பயிற்சி
பாடம் - 8.

தருமையாதீனப் பண்டார சாத்திரங்கள்

பண்டாரம் என்ற சொல் மிகப்பழமையானது. கருவூலம் என்ற பொருளை உணர்த்தும் இச்சொல் சங்ககால இலக்கியமாகிய பரிபாடலிலும் அருமையாக எடுத்தாளப்பெறுகிறது. பொருள்களைச் சேர்த்துச் சேமித்துவைக்கும் இடத்திற்குப் பண்டசாலைகள் என்று வழங்கும் வழக்கு இக்காலத்திலும் உண்டு. பண்டசாலை பண்டக சாலையாகமாறி வழங்குகின்றது. அதுபோல இச்சொல் ஞானநுப வங்களைத் தேக்கி வேண்டும்போது அவ்வவர் தகுதிக்கேற்றவாறு வழங்கும் அறிவுக்களஞ்சியத்தை உணர்த்திப் பின்னர் அறிவுக் கருவூலமாக விளங்கும் ஆசாரியப் பெருமக்களுக்கு வழங்குவ தாயிற்று. பண்டம் - ஆரம் என்ற இருசொற்களின் கூட்டமே பண்டாரம் என்பதாகும். பண்டம் - ஞானம். ஆரம் - ஆர்தல்; நிறைதலை உடையது என்ற பொருளைத்தருவது இச்சொற்றொடர். மணிவாசகர் இறைவனை ''மூலபண்டாரம்'' என்று வழங்குவதை யும் நினைவுகொள்ளுதல்வேண்டும்.

ஞானக் கருவூலங்களாக விளங்கிய ஆசாரியப் பெருமக்கள் சிவாநுபவ நிலையிலிருந்து பரிபாகமுற்ற சீடர்களுக்குக் கூறிய உபதேசங்களேபண்டாரசாத்திரங்கள் எனப்படும். இச்சாத்திரங்கள் வேதசிவாகமங்கள், சித்தாந்த சாத்திர தோத்திரங்கள் இவற்றின் பிழிவாக விளங்குபவை. இம்முறையில் தருமையாதீனத்தைநிறுவிய முதற்பெருங்குரவர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் முதலாகப் பின்னர் அவர்கள்வழி எழுந்தருளிய ஆசாரியப்பெருமக்கள் அருளிச்செய்த உபதேச நூல்கள் அனைத்தும் பண்டார சாத்திரங்கள் எனப்படும்.

தருமையாதீனப் பண்டார சாத்திரங்களில் ஸ்ரீ குருஞான சம்பந்தப்பெருமானால் அருளிச்செய்யப்பெற்ற நூல்கள் எட்டு. அவையாவன :- சிவபோகசாரம், சொக்கநாத வெண்பா, முத்தி நிச்சயம், திரிபதார்த்தரூபாதி தசகாரிய அகவல், சோடசகலாப் பிராசாதஷட்கம், சொக்கநாதக்கலித்துறை, பண்டாரக்கலித்துறை, நவரத்தினமாலை என்பனவாகும்.

1. சிவபோகசாரம் :

இந்நூல் பதினெண்சித்தர்க் கோவையிலும் மற்றும் பல நூல்களிலும் இணைக்கப்பெற்றுத் தமிழ் மக்களால் விரும்பிப் பயிலும் நூலாக இருந்துவருகின்றது. தருமையாதீனப் பண்டாரசாத்திரங்களில் மிக மேலான நூலாக மதிக்கப்பெறுவது. மக்கள் மனம் பண்படவும் பக்திநெறியில் செல்லவும் இந்நூற் பாடலில் ஒன்றே போதுமானது என்பதைப் பயின்றவர் அறிவர். இந்நூல் பயிலுவதற்குச் சில தகுதிகள் முதலில் தேவை.

இறைவன் திருவருளைப் பெறுதற்குரிய வேட்கை யிருக்க வேண்டும். பிறப்பு துன்பம் தருவது; வீடுபேறு ஒன்றே இன்பம் தருவது என்ற உணர்வும் பிறவித் துன்பங்களுக்கு ஏதுவான வினையை நீக்கிக்கொள்ளுதற்கேற்ற முயற்சியும் அதனுல் பேரின்பத்தைத்தரும் சிவாநுபூதி நிலையை அடைதற்கண் வேட்கையும் உடையவராய் விரையவந்தடையும் தீவிரதர பக்குவிகட்கு இந்நூல் உரியது என்று ஸ்ரீ குருஞானசம்பந்தரே கூறுகின்ருர்.

பிறப்பொழிக்கும்வழி, நிலையாப் பொருளுணர்ச்சி, திருவருட் பேற்றின் தடைகள், குருவின் பெருமை, சிவபோகம் முதலிய பல்வகைப் பொருள்களை இந்நூல் எடுத்துக்கூறிச் சிவாநந்த சாகரத்துள் ஒன்றும் இரண்டு மறத்தோயும் சிவபோகச் சிறப்பைச் சாரமாக எடுத்துக்கூறுவதால் சிவபோகசாரம் எனப் பெயர் பெற்றது.

இந்நூலில் ஸ்ரீ குருஞானசம்பந்தரது உபதேச மொழிகளாக உள்ளனவற்றுள் சிலவற்றைச் சிந்திப்போம்.

யாவர்க்கும் அவரவர் வினைக்கு ஈடாக முன்னே அமைந்து கிடக்கின்ற நன்மை தீமைகளைவைத்து அவ்வவர்க்கும் இறைவனே நன்மை தீமைகளைச் செய்தலால் உலகத்தில் நல்லவர் பொல்லாதவர் என்று யாரையும் எண்ணுதல்கூடாது. நன்மைவரும்போதும் கேடுவரும்போதும் எல்லாம் சிவன்செயல் என்றே இருக்க வேண்டும்.

உலகம் கனவுபோன்றது. அதில் பற்றுவைத்தலை விட்டுப் பரத்தில் அன்புசெய்.

தேசம், ஊர், பேர், காணி, சீர், வரிசை, சாதியென்று ஆசையால் நெஞ்சே அலையாதே.

இருவர் அறியாத ஈசன் அருளல்லால் ஒருவர் துணையுண்டோ உரை.

உடம்பு - சிறை. கரணங்கள் - காவலர். உலக போகங்கள் - தண்டனை. உயிர் - கைதி. விடுதலை அளிப்பவன் - இறைவன்.

கற்க இடர்ப்பட்டுக் கற்ற எல்லாம் கற்றவர்பால், தர்க்கமிட்டு நாய்போலச் சள்ளெனவோ? நற்கருணை வெள்ளம் அடங்கும் விரிசடையார்க்கு ஆளாகி உள்ளம் அடங்க அல்லவோ.

நீதியற்ற மன்னவராளும்நாடு, நெற்றியில் விபூதிஇல்லாதவர் செய்யும் தவம், இறைவன் திருவடி அறியாத ஆசான், கல்வி இல்லாதவர் ஒழுக்கம் இவைகளை விழலென நீக்கிவிடு.

பரபரக்காதே. அமைதியாக எதையும் ஆராய்ந்தறி. ஒருவருக்கும் தீங்கு எண்ணுதே. செய்ந்நன்றி மறவாதே.

தில்லை, திருவாரூர், மாயூரம் போன்ற சிவதலங்களை யாத்திரை செய்து தரிசனம் செய் அல்லது இங்கு எல்லாம் இறைவன் எழுந்தருளியுள்ள அருமையை எண்ணி அத்தலத்தின் பெயர்களையாவது சொல்; முத்திதானே கிடைக்கும்.

ஆசையை அகற்று, சிவபூசைசெய், திருவைந்தெழுத்தை எண் சினம் தவிர், திருமுறைகளை ஓது.

இவ்வாறு சிவபோகசாரம் இறைவன் திருவருள் பெறுதற்குரிய எல்லா வழிகளையும் உபதேசவாயிலாக உணர்த்துகின்றது.

2. சொக்கநாத வெண்பா :

இது குருஞானசம்பந்தர் ஆன்மார்த்த மூர்த்தியாகிய சொக்க லிங்கப்பெருமான்மேல் பாடியருளிய தோத்திர நூலாகும்.

வறியவர் செல்வர் என்ற வேறுபாடு கருதாது இருவரையும் காத்தல் மன்னவன் கடமை. தென்பாண்டி மன்னனுக நாடாண்ட சொக்கேசன் அறிஞர்களை மட்டும் ஆட்கொள்வது நீதியா என்று நீதிக்கு வாதாடும் காட்சி அறிவிற்கு விருந்தளிக்கிறது.

நோய்கண்டவர்கள் உதவிக்கு மருத்துவரைஅழைப்பர். மருத்து வரும் நோய்நாடி, நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி நோய் நீக்குவர். பிறவிப் பெருநோய் போக்கும் மருத்துவனுகிய இறைவன் எத்தனைமுறை அழைத்தும்இவர்பால் வந்தாரில்லையாம். மருத்துவரும் கருணையில்லாதவர் அல்லர். பன்றிக்குட்டிக்கும் பரிவு காட்டிய பண்பினர், தன்னிடத்துமட்டும் இவர் தயவு காட்டாதது ஏன் ? என்கிறுர்.

நோயால் வருந்திஉனை நூறுதரம் கூப்பிட்டால்
நீயாரென திருக்கை நீதியோ — தாயாய்
அலைகொடுத்த கேழல் அருங்குழவிக்கு அன்று
முலைகொடுத்தாய் நீயலவோ முன்

உள்ளம், உரை, உடல் மூன்றாலும் இறைவனைப் பக்திசெய்ய வேண்டும். இவைகளை உண்மையில் இயக்குவது நம் உயிரல்ல. இவற்றை இயக்குபவன் இறைவன்தான்.

மூன்று கரணங்களும் தீயவழிகளில் செல்வதற்கும் அவன் தானே காரணமாவான். ஆலவாய் இறைவனே! என் கருவி கரணங்களை நல்வழியில் செலுத்தி எப்போது எனக்கு முத்தி சித்திக்கச் செய்யப் போகிறாய் என்று கேட்கிறார்.

வாக்கில் உரை பொய்யே மனம்நினைப்ப தும்கவடே
ஆக்கைதினம் செய்வது அகிர்த்தியமே — நோக்கில்
திரிவிதமும் இப்படிநீ செய்வித்தால் முத்தி
தருவிதமென் சொக்கநாதா

குருஞானசம்பந்தர் கேட்கும் சில வரங்கள் நாம் கேட்பனவாக உள்ளன. மாபாதகன் என்று நீக்காது என்னை அருளில் ஆண்டருள். பேசா அநுபூதி பிறக்க எனதுளத்தில் ஆசாபசாசை அகற்று. இறந்தும் பிறந்தும் இளைத்தேன். மறந்தும் பிறவா வரம்தா. உனக்குப் பணிசெய்ய உன்றனை எந்நாளும் நினைக்கவரம் எனக்கு நீதா :-

பேரன்பன் அல்லன் பிழைசெய்யான் தானல்லன்
ஓரன்பும் இல்லா உலுத்தனேன் — பேரன்பு
காட்டிஎனைக் காட்டிஉனைக் காட்டி இன்பத் தொட்டிலிலே
ஆட்டிவளர் சொக்கநாதா

3. முத்தி நிச்சயம்:

சிதம்பரத்திலிருந்து கண்கட்டி மறைஞான பண்டாரம் என்னும் சைவப் பெரும்புலவர் "வீடுபெற்ற உயிர் தன் இன்பமேநுகரும்; சிவானந்தம் நுகர்தல் இல்லை" என்ற முடிவைக்கொண்ட முத்தி நிலை என்றொரு நூல் இயற்றினார். அதை மறுத்து ஸ்ரீ குருஞான சம்பந்தர் எழுதிய நூல் முத்திநிச்சயம்.

வேதாகமத்தின் விதித்தமுத்தி தானன்றி
நீதானே இன்பமென்றல் நீதியோ

என்று அறியாமையால் எழுந்த கருத்து நீதிக்கு மாருனதென இடித்துரைத்து வேதாகம நீதிக்கு மாருகாத முத்தியைப் ' பெறுவான் நீ; பேறு ஆனந்தம் ' என்றுணர்த்திய நூல் இது.

உற்றபர மாநந்தத்து ஒன்ருய் அதில்உறங்கி
முற்றுவதே முத்தி முடிவு

என்றும்

உள்ளமலம் நீங்கி ஒங்கு சிவானந்த
வெள்ளம் திளைத்துஅதுவாய் மேவுதலே — கள்ளவிழ்பூங்
கொத்தார் விரிசடையார் கூறு சிவாகமத்தில்
சித்தாந்த முத்தியெனத் தேறு

என்றும் முத்திநிச்சயம் உரைக்கிறது.

4. திரிபதார்த்த ரூபாதி தசகாரியம் :

முப்பொருள்களாகிய பதி பசு பாசம் என்பவற்றின் உருவம் முதலிய பத்துக் காரியங்களை உணர்த்தும் நூல். பாச தசகாரியம்:- சுபாவம், வியாத்தி, வியாபகம், குணம், விசேடம், ரூபகம், ரூபம் சொரூபம், தரிசனம், சுத்தி, பசுதசகாரியம்:-சுத்திநீக்கி மேற்கூறியவற்ருேடு லாபம் என்ற ஒன்று சேர்த்துக்கொள்க. பதி தசகாரியம்:- மேற்கூறியவற்றில் சுத்தி, லாபம் என்ற இரண்டை நீக்கி வியோகம் போகம் கூட்டுக.

மற்ற தசகாரிய நூல்களுக்கு இல்லாத தனிச்சிறப்புஇந்நூலுக்கு உண்டு. ஏனைய நூல்கள் உண்மை என்பதை ரூபம் என்றும் பதி காரியத்தில் சுத்தி என்றதைச் சிவபோகம் சிவயோகம் எனவும் கூறுகிறது இந்நூல்.

5. சோடசகலாப் பிராசாத ஷட்கம் :

யோக நெறிக்கு இது மிகச் சிறந்தநூல். பிரா - சிவஞானம், ஸா - கதி, தம் - தருவது. சிவஞான கதியாகிய மோக்ஷத்தைத் தரும் ஆறு பாடல்களை உடையது. ஷோடச கலைகள் - பதினறு கலைகள். பிராசாதம் கலா பேதவகையால் பஞ்சகலாப் பிரசாதம், அஷ்டகலாப் பிராசாதம், நவகலாப் பிராசாதம், துவாதசகலாப் பிராசாதம், சோடசகலாப் பிராசாதம் என ஐந்து வகைப்படும். அகாரம், உகாரம், மகாரம், விந்து, அர்த்த சந்திரன், நிரோதினி, நாதம், நாதாந்தம், சக்தி, வியாபினி, வ்யோம ரூபினி, அநந்தை,

அநாதை, அநாசிருதை, சமனை, உன்மனை என்னும் பதினறு கலைகளின் இயல்புகள் விரித்துரைக்கப் படுகின்றன. இக்கலைகள் நாபி முதல் தலைக்கு மேலும் பன்னிரண்டங்குலம்இருந்து விளங்கும்.

தருமையாதீனத்தில் குருவருளால் இக்கலைகளைப் பயின்றவர் முறையே தங்கி நிட்டை புரிந்த இடம் பதினறெடுக்கம் என விளங்குகின்றது.

6. சொக்கநாதக் கலித்துறை :

கண்ணுக்கினிய பொருளாய்க் குருஞானசம்பந்தர் திருக்கையில் சொக்கநாதப் பெருமான் கிடைத்த பொழுது அருளிய தோத்திரம்.

ஆதாரம் உன்னையல்லால் ஆருளர்? துக்க சாகரத்தில் மூழ்கிய என்தலை விதியை மாற்றி ஆனந்த சாகரத்துள் அழுத்துக, எல்லாம் சிவன் செயலாதலின் என் செயலாவது யாதொன்றுமில்லை என்று கூறும் பாடற்பகுதிகள் கல்மனங்கரைக்கும் அருட்கவிதைகள்.

7 .ஞானப்பிரகாசமாலை:

பண்டாரக் கலித்துறை எனவும் வழங்கப் பெறுவது. ஸ்ரீ குருஞானசம்பந்தர் பக்திக்குச் சான்ருக விளங்குவது.

குருஅடி பேரார் கருவடிசேரார், குருவேசிவமெனக் குறியார்க்கு நரகு, குருவருள் எதிரே கருஇருள் உருது, தாயினுமினியன் சற்குருநாதன், முதலிய பல நற்கருத்துக்களால் குருபக்தியின் இன்றியமையாமை புலப்படுத்தப் பெறுகிறது.

8. நவரத்னமாலை :

ஸ்ரீ குருஞானசம்பந்தர் தம் குருநாதராகிய கமலை ஞானப் பிரகாசர் சிவசாயுச்சியம் பெற்றபோது அவரது பிரிவாற்ருமல் பாடியது.

இவ்வெட்டு நூல்களும் ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருளிய நூல்களாகும். மேற்கூறிய எட்டு நூல்களேயன்றி ஞானவரண விளக்கம், சிவபூசாபத்ததி என்ற இரண்டு வேறுநூல்களும் ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருளியனவாக அறியப்படுகின்றன. இவற்றுள் ஞானவரண விளக்கம், சிவஞானசித்தியார் பரபக்கம், சுபக்கம் என்ற இருபகுதியின் பொருளையும் விரித்துரைக்கும் நோக்கில் பெருவிளக்கமாக ஸ்ரீ குருஞானசம்பந்தரால் அருளிச் செய்யப்பெற்றது.

நான்காவது குருமூர்த்திகளிடம் உபதேசம்பெற்ற ஸ்ரீ வெள்ளியம்பலவாண முனிவர் வடமொழி, தென்தமிழ் இரண்டிலும் பெருவல்லமைபெற்று விளங்கியவர்கள். இவர்கள் முத்திநிச்சயச் சிற்றுரை மற்றும் பேருரை நூல்களும், ஞானுவரணவிளக்க உரையும் அருளிச்செய்தார்.

வருணுசிரம சந்திரிகை :

வருணுசிரம சந்திரிகை என்ற நூல் ஒன்று தருமையாதீன ஏழாவது குருமூர்த்திகள் ஸ்ரீ திருவம்பல தேசிகரால் இயற்றப் பெற்றது. நான்காம் வருணத்தினர்க்கும் சந்நியாசம் உண்டு என்பதனை சுப்ரபேதம், காமிகம், அஜிதம், காலோத்தரம் முதலிய ஆகமங்களில் காணப்படும் வசனங்களை ஆதாரமாகக்கொண்டு இந் நூல் நிறுவுகிறது. இதேபோலக் குருநாதராக எழுந்தருளியிருந்து ஞானுபதேசம் செய்யும் உரிமை நான்கு வருணத்தார்க்கும், இல்லறம், துறவறம் என்ற இருவகை நிலையிலும் உரியது என்பதனையும் இந்நூல் சான்றுகளோடு நிறுவுகிறது. தருமையாதீனத்தில் இந்நூல் அச்சிடப் பெற்றுள்ளது.

சமாதிலிங்கப் பிரதிட்டாவிதி :

தமிழகத்துத் திருக்கோயில்களின் அமைப்பு, சிவாகமங்களின் கூறப்பெற்றிருக்கும் நெறிமுறைகளை அடிப்படையாகக்கொண்டது. இந்நூல்கள் பலவும் வடமொழியிலேயே உள்ளன. இவ்வகையில் தமிழில் ஓர்நூல் இல்லாத குறையை நீக்கும்வகையில் 220 திருப்பாடல்களால் ஸ்ரீ திருவம்பல தேசிகரால் அருளிச்செய்யப் பெற்ற நூல் சமாதிலிங்கப் பிரதிட்டாவிதி என்னும் அரிய நூல்.

சித்தாந்த நிச்சயம்:

9 ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ திருநாவுக்கரசு தேசிக சுவாமிகள் அவர்கள் அருளிய 'சித்தாந்தநிச்சயம்' தமக்குமுன் வாழ்ந்த குருமுகமாகக் கேட்ட உபதேசங்களை அடிப்படையாகக் கொண்டது.

10 ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீசிவஞானதேசிகசுவாமிகள் அருளிய 16 நூல்களாவன 'செல்வமுத்துக்குமாரர் திருவருட்பா' 'ஆபதுத்தாரணர் மாலை' 'சிதம்பரநாதர்பதிகம்' 'தக்ஷிணுமூர்த்தி திருவருட்பா' 'அசபாநடனப் பதிகம்' 'துண்டிராஜகணபதி'

'விசுவநாதர்' 'அன்னபூரணி' 'கேதாரநாதர்' 'கேதார கௌரி' 'விருத்தகாளேசுவரர்' 'காசிகாலபைரவர்' 'கதிர்காம வேலர்' 'பாகீரதியம்மை' 'சொக்கநாதசுவாமி' திருவருட்பாப் பிரபந்தங்களும், தாரகப்பத்தும் இவர்கள் இயற்றியருளியவை.

11 ஆவது குருமூர்த்திகள் ஸ்ரீ சச்சிதானந்த தேசிக சுவாமிகள் வடமொழிச் சிவஞான போதத்திற்கு வடமொழியில் ஒரு பாஷியம் எழுதியருளியுள்ளார்கள்.

25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளிய சாத்திர தோத்திர விரிவுரைகள் 'செந்தமிழ்ப்பூம்பொழில்'களாக வெளிவந்துள்ளன.

வினாக்கள்:

1. பண்டாரம் என்ற சொல்லிற்குப் பொருள் என்ன ?
2. தருமை ஆதீன குருமுதல்வர் இயற்றிய நூல்கள் யாவை ?
3. 'முத்திநிச்சயம்' என்ற நூல் எழுதப்பட்ட காரணம் என்ன ?
4. 'வருணாசிரம சந்திரிகை' என்ற நூலை இயற்றியவர் யார் ? அந்நூலைப்பற்றிச் சிறு குறிப்பு வரைக.
5. வடமொழி சிவஞானபோதத்திற்கு பாஷ்யம் எழுதியவர் யார் ?
6. சமாதி லிங்கப் பிரதிஷ்டாவிதி – எழுதியவர் யார் ?

கட்டுரை வழங்கியவர் :-

வித்துவான்,

திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம், ஏ.,